
# அங்குசம்

# ANGUSAM

மலர் 1 | 2003 ஜனவரி – பெப்ரவரி | இதழ் 1



விலை :20/=

# அங்குசம்
# ANGUSAM

இல.12, இராசாவின தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

"வித்தை விரும்பு"
"LOVE LEARNING"

No.12. Rasavinthoddam Road,
Jaffna.



<u>ஆலோசகர் Adviser</u>

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர்.யாழ்.பல்கலைக்கழகம்
Prof.P.Balasundarampillai
Vice Chancellor, University of Jaffna.

<u>காப்பாளர்கள் Patrons</u>

**எந்திரி. ச. ஆ. ஞானேந்திரன்**
இணைப்பாளர், யாழ் திறந்த
பல்கலைக்கழகம்
Eng.S A. Gnanendran
Co- ordinator, Open University

**எ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
அதிபர், கோப்பாய் ஆசிரிய
பயிற்சிக் கலாசாலை
A.Sriskanthamoorthy
Principal, Teachers Training College,
Kopay

**கு. சதாசிவமூர்த்தி**
அதிபர், பலாலி அசிரிய
பயிற்சிக் கலாசாலை
S.Sathasivamoorthy
Prinipal, Teachers Training College,
Palaly.

**கலாநிதி தி. கமலநாதன்**
பீடாதிபதி, கல்வியற் கல்லூரி
Dr.T.Kamalanathan
President. College of Education

**த. இராஜரட்ணம்**
இயக்குநர்,
உயர் தொழில்நுட்ப நிறுவனம்

T.Rajaratnam
Director,dvanced Technical Institute.

**எஸ். செந்தில்நாதன்**
அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி
S.Senthilnathan
Principal, Technical College.


## அகரவேளையில் அன்பர்களோடு,

**வணக்கமும் வாழ்த்துக்களும்!**

இதழியல் சார் துறைகள் சமூகத்தின் "நான்காவது சொத்து" எனப்படுகின்றன.

சஞ்சிகைகளுக்கான தேவை அதிகரித்துள்ள - அவற்றுக்கான தேடல் குறைவடைந்துள்ள - தற்போதைய சமூகச் சூழலில் "அங்குசம்" உங்கள் கைகளில்!

சஞ்சிகைத் தேவையை நிறைவு செய்து மட்டுமன்றி,அதனைத் தேடுவதற்கான 'தாகத்தை" சமுதாயத்தில் ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பையும் "அங்குசம்" கொண்டுள்ளது.

எமது சமுதாயம் பயனுற வாழும் வகையில், மூத்த எழுத்தாளர்களின் படைப்புக்களை தன்னூடாக வழங்குவதுடன் அவிழத் துடிக்கும் இளம் மொட்டுக்களை, அரங்கேற்றுவதையும் 'அங்குசம்" தன் பணியாகக்கொண்டிருக்கும்.

தனது கடமைகளை உணர்ந்து "அங்குசம்" செயற்படுமென பிரதிக்ஞை செய்து, வித்தைக்கு அதிபதியாம் விநாயக் கடவுளின் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம் இந்நூலை!

உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வரவேற்கிறோம்.!!

நன்றி

ஆசிரியபீடம்

ஜனவரி 2003

# கருவியைக் கையாள...!



| | |
|---|---|
| அங்குசம் | |
| வாழ்க தமிழ் | 3-4 |
| குறளும் கதையும் | 5 |
| எழுது | 6 |
| தத்துவ ஞானிகளின் தந்தை | 7-8 |
| முகம் | 9-10 |
| மனித உரிமைகள் | 11-13 |
| மூலநோய் | 14-17 |
| நூல் அறிமுகம் | 18 |
| English Park | 19-20 |
| அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு | 21-22 |
| உயிர்ப்பிழக்கும் உணர்வுகள் | 23-30 |
| சுயதொழில் வழிகாட்டி(கோழி வளர்ப்பு) | 31-34 |
| எதிரியைத் தாக்குவதல்ல கராத்தே | 35-36 |
| நினைந்த போது | 38 |
| இது ஈழக்கடல் | 39 |
| அவகாசம் | 43 |
| அந்த மர நிழலில் | 45-46 |
| பண்டிதர் க.சச்சிதானந்தன் | 48-50 |



**முத்துக் குளித்தல்**

**தொகுப்பும் அமைப்பும்: ஆசிரிய குழு**

**ஓவியங்கள்: எஸ்.பிரசாந்தன்(சாந்தன்)**
**யாழ்.பல்கலைக்கழகம்**



# வாழ்க தமிழ்

கனிமொழியே தனிமொழியே
கவின்மொழியே வாழ்க
கற்பனையே அற்புதமே
பொற்புருவே வாழ்க
பனிமலரே எனதுயிரே
நனிசுவையே வாழ்க
பானிலவே வானமுதே
தேனனையாய் வாழ்க.

இயலென்றே நீவளர்ந்தாய்
இவ்வுலகோர் மகிழ்ந்தார்
இசையென்றே நீ செழித்தாய்
இவ்வுலகோர் நெகிழ்ந்தார்
நயமெல்லாம் மிகக்கொண்ட
நாடகமாய் எழுந்தாய்
நாட்டினரும் உலகினரும்
நாடிநிதம் உயர்ந்தார்.

அகப்பொருளாய் புறப்பொருளாய
அரும்பொருளாய் வாழ்க
அகத்தியனால் காப்பியனால்
வளர்ந்தனைநீ வாழ்க

மிகப்பலவாய் இகப்புகழாய்
விளங்கிடுவாய் வாழ்க
மென்மொழியே செந்தமிழே
என்னுயிரே வாழ்க.

பாட்டாக முன்நடந்தாய்
உலகநிலை கண்டாய்
பாரினிலே உரை நடையாம்
புதுநடையும் கொண்டாய்
காட்டாறு போல்நீயோ
காலமெல்லாம் விரைந்தாய்
கட்டழகு குன்றாத
மேனியினாய் வாழ்க.

கவிதைஎனப் புலவோர்கள்
உனைவியந்தே நிற்பார்
கதையென்றும் நாவலென்றும்
பலர்கூடி நயப்பார்
புவிபோற்றும் புகழ்படைத்தாய்
பூங்கொடியே வாழ்க
புதுமொழியே மதுமொழியே
பழமொழியே வாழ்க.

*புலவர் ம. பார்வதிநாதசிவம்*
*(பசிப்பிணி மருத்துவன்)*

# குறளைக் கற்பதல்ல சிறப்பு!

தெல்லியூர்
சி. ஹரிகரன்

குறுநில மன்னனாகிய அதியமானுக்கு மரணப் பிணியில் இருந்து விடுபட்டு நீண்டகாலம் சிறந்த ஆயுளோடு வாழக்கூடிய அரிய நெல்லிக்கனி கிடைத்தது. அந்த நேரம், அவனது வாசல் நோக்கி விருந்தினர் ஒருவர் வருகிறார். அதியமான், வந்திருக்கும் விருந்தினர் ஔவை என்பதை உணர்கின்றான். உடனே சிந்திக்-கின்றான். நான் இந்த நெல்லிக்கனியை உண்பதால் எதுவிதபலனும் இல்லை. ஆனால், ஔவை இந்த நெல்லிக்கனியை உண்டு பலகாலம் வாழ்ந்தால், இந்த நாட்டுக்கும் தமிழுக்கும் சிறப்பு. இவ்வாறு சிந்தித்து, தனக்குக் கிடைத்த சாகா மருந்தினை ஔவைப்பாட்டிக்குக் கொடுத்தான்.

## குறளும் கதையும்

விருந்து புறத்ததாய் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் நன்று.


நாம், எமக்குக் கிடைத்த பொருள் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அதை நாமே உண்பதால் நாட்டுக்கு எவ்வளவு பயன் ஏற்படும், மற்றவர் உண்பதால் நாட்டுக்கு எவ்வளவு பயன் கிடைக்கும். என்று சிந்தித்து விருந்துபசாரம் செய்யப் பழகவேண்டும். அதியமானு-டைய விருந்தோம்பலுக்கு வள்ளுவரின் மேற்படி குறள் சாலப் பொருந்தும்.

**நம் பள்ளிக் கூடங்களில் உலக சரித்திர பாடம் கற்றுக் கொடுக்கும் முறை மிகவும் அதிருப்திகரமாக இருக்கிறது. சரித்திரப் பாடம் கற்றுக் கொடுப்பதன் நோக்கம், சில திகதிகளையும் சம்பவங்களையும் மாணவர்கள் உருப்போட்டு மனப்பாடம் செய்ய வேண்டும் என்பதல்ல. ஒரு தளபதியோ அல்லது வேறொருவரோ பிறந்ததினம், ஒரு மன்னரின் பட்டாபிஷேக நாளை அறிந்து கொள்வதில் மாணவர்களுக்கு என்ன சிரத்தையிருக்க முடியும்? அவை அவ்வளவு முக்கியமான விஷயங்களா?**

**சரித்திரப் பிரசித்தமான சம்பவங்களுக்கு காரணங்களையும், அச்சம்பவங்களை உருவாக்கிய சக்திகளையும் ஆராய்ந்தறியும்படி செய்வது தான் சரித்திர பாடத்தின் தத்துவம்.**

அடால்பு ஹிட்லரின்
மெய்ன் காம்ப்(எனது போராட்டம்)
என்ற நூலிலிருந்து......

# எழுது



எழுது!
உன்னால் முடியும்
ஏதாவது எழுது

சிறகு முளைத்த
உன்
சிந்தனைகளை
இனியும்
சிறைவைக்காதே
எழுது!
உன்னால்
வாழ்க்கையின்
இன்னொரு பகுதியும்
பார்க்க முடியும்.

எழுது!
ஏனிந்தத் தயக்கம்
தனிமையும் இனிமையும்
தவமாய்
இருக்கும் போது
உன்னால்
எதையும் சாதிக்கலாம்.

முட்களுக்காய்
நீ
முகாரிபாடினால்
உன்னால்
பூக்களை
காதலிக்க முடியாது.

எங்கே!
எழுதத் தொடங்கு
இதோ!
இன்னுமொரு
அக்கினிவேள்வி
பொங்கட்டும்.

கொடுமைகள்
சுட்டெரிக்க
உன்பேனா
சத்திய வேள்விகள்
செல்லட்டும்

ஏழைகளின் வியர்வையில்
இலக்கியம் பாடு

இனியும் தயங்காதே
உன்னால் முடியும்
அகரம் கற்றுத் தான்.
அனைத்தும் கற்பது.

எடுபேனாவை
தொடு போரை

'கிராமத்துக் குயில் ஓவியா'
கு. றஜீவன்



அடுத்த இதழில்
மனித நடத்தையை தீர்மானிப்பது சூழலா? பரம்பரையா?

ஆராய்கிறார் ஏ. அகிலதாஸ்
உளவியல் சிறப்புக் கலை
யாழ் பல்கலைக்கழகம்

## தத்துவ ஞானிகளின் தந்தை

# சோக்கிரட்டீஸ் SOCRATES

எம் மயூரன்
கலைபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

உலக வரலாற்றுப் போக்கில் கிரேக்கத்திலேயே மாபெரும் சிந்தனையாளர்களும், தத்துவஞானிகளும், கலைஞர்களும் அதிகம் தோன்றியுள்ளனர். அவர்களுள் காலத்தால் முந்தியவரும் பிளாட்டோ, அரிஸ்டோட்டில், மகா அலக்சாண்டர் ஆகியோரின் தத்துவ சிந்தனைகளுக்கு வித்திட்டவரும் சோக்ரட்டீஸ் ஸேயாவார். மாபெரும் தத்துவ ஞானியான இவர் 'தத்துவஞானிகளின் தந்தை' (father of philosophers) என வர்ணிக்கப்படுகிறார்.

சோக்கிரட்டீஸ் கிரேக்க நாட்டின் கலைகளின் உறைவிடமான ஏதென்ஸ் நகரில் கி.மு. 469ஆம் ஆண்டில் பிறந்தார். சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளிற்கு முன் வாழ்ந்த இவர் 'மகத்தான மனிதர்', 'மாபெரும் சிந்தனையாளர்', 'உலகின் முதலாவது அறிவு ஜீவி' என்றும் போற்றப்படுகிறார். ஏழ்மையிலே பிறந்து வளர்ந்த இவருக்கு வறுமை என்றுமே சவாலாக இருந்ததில்லை. இவருடைய வாக்கும் வாழ்வும் தத்துவமாகவே இருந்ததோடு அவை வாழ்வியல் பற்றிய அறிவை உலகிற்கு எடுத்து விளக்குவனவாகவும் அமைந்தன.

'எனக்கு ஒன்றுமே தெரியாது என்ற ஒன்றை தவிர எனக்கு ஒன்றுமே தெரியாது" என்ற தத்துவ வாக்கியத்தினை கூறியவரும் 'உன்னையே நீ அறிவாய்' என்ற புகழ் பெற்ற வாக்கியத்தினை உரைத்தவரும் இவரேயாவார். 'பகுத்தறிவு' என்பது இவரது போதனையின் அடிநாதம். இன்றைய சீர்திருத்த வாதிகள், சிந்தனையாளர்கள் எல்லோரையும் அன்றைக்கே ஏப்பம் விட்டவர் சோக்கிரட்டீஸ். "எதையும் அப்படியே நம்பி விடாதே! ஏன்? எதற்கு? எனக் கேள்வி கேள்" என்ற சிந்தனையை வளர்த்தவர்; வலியுறுத்தியவர். முடத்தனம் குருட்டு நம்பிக்கை என்பவற்றை ஒழித்து, அறிவார்ந்த சிந்தனையை அவனிக்கு அளித்த அறிஞர். ஏதென்ஸ் நகர கடைத் தெருக்களில் மக்கள் கூடிய இடங்களில்

சென்று தனது பேச்சுக்கள் மூலம் தத்துவ சிந்தனைகளைப் பரப்பினார். நகைச்சுவை உணர்வு ததும்ப ஆழமான கருத்துக்களை விதைத்தார். பகல் வேளை, கையில் விளக்குடன் நகர வீதிகளில் உலாவரும் இவர். "நான் மனிதனைக் தேடுகிறேன்" என்பார் சோக்கிறட்டீஸ், கிரேக்க நாட்டு இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்தினார். இதனால் அன்றைய ஆட்சியாளர்கள் இவருக்கு அஞ்சினர். சோக்கரட்டீஸ்சின் தத்துவார்த்தமான கருத்துக்களால் மக்கள் அரசுக்கு எதிராக கிளர்ந்து எழலாம் எனக் கருதினர். இதனால்

'கிரேக்க இளைஞர்களை கெடுக்கிறார்" என்ற குற்றச் சாட்டு சோக்கிரட்டீஸ் மீது சுமத்தப்பட்டது. உறுதியாக அதனை மறுத்த அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவரது சீடர்கள் அவரை காப்பாற்ற முயன்ற போதும் அதனை மறுத்த சோக்கிரட்டீஸ் சட்டத்தினை நான் மதிக்கிறேன்' கி.மு 399ஆம் ஆண்டின் மாலைப் பொழுதொன்றில் விஷம் கலந்த உணவை அருந்தி உயிர் துறந்தார்.

இவரின் தலை சிறந்த சீடர்களில் முதன்மையானவர் தான் பிளாட்டோ. பிளோட்டோவின் மாணவரே அரிஸ்ரோட்டல் ஆவார்.

சாவு குறித்து சோக்கிட்டீஸ் கூறுகையில்; "மரணம் பற்றிக் கவலைப்படாதே! நீ இருக்கும் வரை மரணம் வரப்போவதில்லை. அது என்னவென்று உனக்குத் தெரியாது. அது வந்த போது நீயே இருக்கப் போவதில்லை பிறகு ஏன் கவலை?" என்றார் அத்துடன் 'நல்ல குணங்களை நான் ஞானம் என்பேன்' என அறிவுக்கு வரைவிலக்கணமும் கொடுத்தார். "நாம் எதை இழந்தாலும் கௌரவத்தை இழக்கக் கூடாது" என்றார். தோழமை தொடர்பாக கூறும் போது, "நட்பைப் பெறுவதில் நிதானமாக இரு. நட்பை பெற்ற பின் உறுதியுடன் நீடித்து நட்பைக் காப்பாற்று" என்றும் "உனது நண்பனைக் காட்டு உன்னை யார் என்று நான் கூறுகிறேன்" எனவும் மொழிந்தார்.

சோக்கிரட்டீஸ், ஆரம்ப படிப்புக் கூட இல்லாத – எழுதவோ, வாசிக்கவோ கூட தெரியாத - ஒருவர் என்பது ஆச்சரியப்பட வைக்கும் விடயம்.

# முகம்



இராஜ். ரமணன்
ஆசிரியபீடம்
'அங்குசம்'

**சேமிப்புக்களுக்கு**
**இலவச காப்புறுதி !**
**எங்களிடமே கிடைக்கும்!!**

தேசிய சேமிப்பு வங்கியின்
யாழ்ப்பாண கிளை
முகாமையாளர் எம். சிவானந்தா கூறுகின்றார்.

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திரு.மயில்வாகனம் சிவானந்தா அவர்கள், 1975 ஆம் ஆண்டிலிருந்து தேசிய சேமிப்பு வங்கியில் பணிபுரிந்து வருகிறார். கடந்த 12 வருடங்களுக்கு மேலாக முகாமையாளராக கடமையாற்றி வரும் அவர், தேசிய சேமிப்பு வங்கி தொடர்பாக 'அங்குசம்' இற்காக வழங்கிய தகவல்களில் சில இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

**ஆரம்ப காலம்**

1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்துக்கு அமைவாக இவ்வங்கி தாபிக்கப்பட்டது. இலங்கை சேமிப்பு வங்கி, தேசிய சேமிப்பு இயக்கம், அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி ஆகியவற்றின் ஒன்றிணைதலால் 1972ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கம்**

"குடும்ப வங்கி" என்ற மகுட வாக்கியத்தை தனது கொள்கையாகக் கொண்டுள்ள தேசிய சேமிப்பு வங்கி, பொது மக்களின் சேமிப்பு ஆற்றலைப் பெருக்கி முதலீட்டு திறனை மேம்படுத்துவதன் மூலம் நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதை தனது பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

**வங்கியில் உள்ள சேமிப்புத் திட்டங்கள்**

தேசிய சேமிப்பு வங்கியில், சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்பு என்பன உண்டு. குறிப்பாக சிறுவர்களுக்கான ரிதிரேகா, பிரார்த்தனா போன்ற விசேட சேமிப்புத் திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புத் திட்டங்கள் வங்கிக் கிளைகளினூடாக மட்டுமன்றி தபால், உபதபால் அலுவலகங்கள்,

பாடசாலைச் சேமிப்புப் பிரிவு போன்றவற்றினூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

**கடன் திட்டங்கள்**

தேசிய சேமிப்பு வங்கி, அரச பிணைப்பத்திரங்களான திறைசேரி உண்டியல், திறைசேரி முறி போன்றவற்றினூடாக கடன் வழங்கியும், அரச கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்கியும், தனியார் துறைக்கு வீடமைப்புக்கடன் வழங்கியும், நிலையான வைப்பினை பிணையாக கொண்டு கடன் வழங்கியும், தனது கடன் சேவையை மேற்கொள்கின்றது.

சில கிளைகளில் விவசாயக் கடனும் வழங்கப்படுகின்றது. 'ரன் சஹன' எனப்படும் நகை அடைவுக்கடன் வசதிகளை வழங்கி வருகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் இலங்கையருக்காக "ரட்ட இதுரு" எனப்படும் ரூபா வைப்புக் கடன் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. மத்திய கிழக்கு நாடுகளுடன் பணப்பரிமாற்றலை மேற்கொள்ளும் பொருட்டு 'வோல் ஸ்ரீற் எக்ஸ்சேன்ஞ்' 'முஸான்டம் எக்ஸ்சேன்ஞ்' ஆகிய கம்பனிகளுடன் தேசிய சேமிப்பு வங்கி ஒப்பந்தம் செய்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்படும் பணத்துக்கு நூறு வீத அரச உத்தரவாதம் உண்டு.

மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக பேணப்படும் ரூபா 10 ஆயிரத்துக்கு குறையாத சகல சேமிப்புக்களுக்கும் ரூபா 3 லட்சம் வரையான இலவச ஆயுள்க் காப்புறுதி வழங்கப்படும். ஜனவரி முதலாம் திகதி, 2003ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் நடைமுறையிலுள்ளது.

இலங்கையிலுள்ள மொத்தம் 104 தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் சுமார் 35 சதவீதமானவை கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் கிளை விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ் கிளையினது செயற்பாட்டுத் திறனுக்கு, அதன் ஏனைய எந்தவொரு கிளையும் சவால் விடுக்க முடியாத நிலையில் உள்ளன.

உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம், ஓய்வூதியத் திட்டம், தேசிய அறக்கொடித் திட்டம் போன்ற ஏராளமான சேமிப்புத் திட்டங்களுடன் பரிசில்களை வெல்வதற்கான ரிதிரேகா பரிசுதியச் சீட்டுப் போன்ற சிறப்புத் திட்டங்களையும் வழங்கி குடும்பத்தின் சுமைதாங்கியாக திகழ்கிறது, தேசிய சேமிப்பு வங்கி.

# மனித உரிமைகள்
# (HUMAN RIGHTS)

வேழினி வல்லிபுரம்
மனித உரிமைகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம்.

மனித உரிமைகள் என்றால் என்ன? இவை எவ்வாறு உருவாகி வளர்ச்சி பெற்று வருகின்றன?. மனித உரிமைகளைப் பேண வேண்டியதன் அவசியம் என்ன? இவற்றை மற்றவர்களால் மீறப்படாமல் எவ்வாறு பேணலாம்?, போன்ற தொடரான பல கேள்விகளில் ஒன்றுக்கேனும் கூடப் பதில் தெரியாத பலர் இன்றைய காலத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள் என்பதனை நாம் நம்பியே ஆக வேண்டும்.

தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தரப்பட வேண்டிய தங்களின் உரிமைகளைத் தட்டிப்பறித்துக் கொண்டிருக்கின்ற ஒரு சமுதாயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள், தமது உரிமைகளைத் தெரிந்து வைக்காத ஒரே காரணத்தினால், அவை மீறப்படுகின்ற போது அவர்கள் நீதிதேடி நீதிமன்றம் போவதில்லை. தமது உரிமைகள் எவை என அறியாத காரணத்தினால், அவை மீறப்படுகின்ற போது அது தமக்கிழைக்கப்படுகின்ற அநீதி என்பதனைக் கூட அவர்களால் உணர முடியாதுள்ளது.

ஒரு மனிதன் தனது பிறப்பிலேயே பெற்றுக் கொண்டுள்ள மனித உரிமைகள், அந்த உரிமைகளை அனுபவிக்கின்ற இன்னொருவனால் மீறப்படுகின்றமை இன்றைய இலங்கையில் அன்றாடம் காணக்கிடைக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ள அறவழிகளாலும் சமயங்களாலும் நன்கு போதிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை தமது சுயநலனின் பொருட்டு வேண்டுமென்றே மீறுகின்ற ஒரு சமுதாயத்தில், தமக்குள்ள உரிமைகள்

யாவை? யாரேனும் அவற்றை மீறினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை? என்பவற்றை மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருத்தல் அவசிய-மானதாகின்றது.

மனித குடும்பத்தைச் சேரந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தினையும் உள்ளடக்கியதாக மனித உரிமைகள் காணப்படுகின்றன. இந்த மனித உரிமைகளை அங்கீ-கரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளது.

பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியவற்றை மனிதன் பூரணமாகத் துய்க்கத் தக்க ஒரு உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சாதாரண மக்களின் மனித உரிமைகளானது சட்டத்தின் ஆட்சிமூலம் கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இல்லாவிடின் கொடுங்கோன்மைக்கும், அடக்கு முறைக்கும் எதிராக எழுச்சி செய்வதற்கு மக்கள் கட்டாயப்படுத்தப்படுவர். இதனை மனித உரிமைகளின் தோற்றம், வளரச்சிப் படிகள் என்பவற்றின் நிலைகளின் மூலம் நாம் நன்குணரக் கூடியதாக உள்ளது. எங்கெல்லாம் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் கிளர்ச்சிகளும், உரிமைப் போராட்டங்களும் ஏற்பட்டுள்ளன என்பதனை வரலாறு தெளி-வாகக் காட்டுகின்றது.

இவ்வாறு மிக உன்னதமாகப் பேணப்பட வேண்டிய மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும், மனிதர்களிடையே பாரபட்சம் காட்டப்படுமிடத்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குமாக 1980ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1990ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் இரண்டு நிறுவனங்கள் காணப்-பட்டன. அவை

1) Human Rights Task force
2) Committee for Elimination of All forms of Disrimination

ஆகியனவாகும்.

இந்த இரண்டு நிறுவனங்களுமே குறிப்பிட்ட சில அமைச்சுகளின் கீழ் காணப்பட்டதனால் அவற்றின் சுயாதீனமான இயங்கும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டது.

சர்வதேச அழுத்தங்களினாலும், இக்காலப்பகுதியில் இலங்கையில் காணப்பட்ட யுத்த சூழ்நிலைகளினாலும் இலங்கையில் ஒரு சுதந்திரமான - தனித்தியங்கக்கூடிய -எந்த அமைச்சுகளினதும் கட்டுப்பாட்டின் கீழ்வராத - அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாயிற்று. அவ்வாறு உருவாக்கப்பட்டதே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்-குழுவாகும்.

இது இலங்கையில் 1998ல் மாகாண, மாவட்ட ரீதியில் கிளைகளைக் கொண்டு தனது பணியை ஆரம்பித்தது அன்றிலிருந்து இன்று வரை இது ஒரு முன்னேற்றப் பாதையிலேயே தொடர்ந்து நடைபோடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது எங்கு மனித உரிமை மீறல்கள் நடந்தாலும் அதனைத் தட்டிக் கேட்கும் வலிமையுடைய ஒரு அமைப்பாகும். இதற்கு பாதிக்கப்பட்ட ஒருவரோ அல்லது அதுபற்றி அறிந்த யாரேனும் ஒருவரோ தகவல்களைக் கொடுத்து தகுந்த நடவடிக்கையை எடுக்கச் செய்யலாம்.

மனித உரிமைகள் தொடர்பான வரலாறு, இலங்கை-யர்களாகிய எமது அடிப்படை மனித உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள் மீறலின் போது உதவி பெற்றுக் கொள்ளுதல், கைது செய்தலும் தடுத்து வைத்திருத்தலும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புகள் போன்ற தகவல்களை தொடர்ந்து பார்க்கலாம்.

-வளரும்-


### புகைப்பது கொடுக்கும் "போனஸ்"

நெதர்லாந்தில் செய்யப்பட்ட ஓர் ஆய்வின்படி "டிமென்ஷியா மனநோய், அஸ்ஸைமர் நோய் வரும் ஆபத்து புகை பிடிப்பதால் இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்திருக்கிறது" என்பதாக இன்டர்நஷனல் ஹெரால்ட் டிரிப்யூன் அறிவிக்கிறது. அஸ்ஸமைர் நோயால் மூளைக் கலங்கள் படிப்படியாக நாசமாகின்றன., இது தான் டிமென்ஷியா மன நோயில் மிகவும் சாதாரண வகை.

(நன்றி - விழித்தெழு)

# மூலநோய் - Haemorrhoids / Piles

பெ. ஜெ. நிரோஷன்
பலாலி ஆசிரியர் கலாசாலை




மூலநோய் என்பது படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை பேசப்படுகின்ற ஒரு நோய் ஆகும். இந்நோய் பெரும்பாலும் வயோதிபர்களை பாதிக்கிறது. ஆயினும் இளையோரும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோய் கிராமப் புறங்களைவிட நகர்ப்புறங்களில் வாழ்பவர்களை அதிகம் பாதிக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்களின் உணவுப் பழக்கம் ஆகும்.

மனிதனின் குதத்திலும் குதத்தை அண்டிய பகுதிகளிலும் உள்ள இரத்த நாளங்களில் உயர் அமுத்தம காரணமாக ஏற்படும் வீக்கம் அல்லது புடைப்பு மூலநோய் என்று அழைக்கப்படுகிறது.

இது மூல்க்கட்டி எனவும் அழைக்கப்படும். இது இரு வகையில் உள்ளது.

i) உள்மூலம் ii) வெளிமூலம்

குதத்தினுள் இரத்த நாளங்கள் அழுத்தப்படுவதால் ஏற்படும் வீக்கம் அல்லது புடைப்பு உள்மூலம் ஆகும். இயற்கைக் கடன் கழிக்கும் போது இரத்த நாளங்கள் (புடைப்பு) உடைவதால் மலத்துடன் இரத்தமும் சிறிதளவு சளியும் சேர்ந்து வெளியேறும். உள்மூலம் அளவில் பெருக்கும் போது குதத் துவாரத்தினூடாக துருத்திக்

கொண்டு வெளிவரும். இந்நிகழ்வு மூலநெகிழ்ச்சி என்று அழைக்கப்படும். இவ்வாறு வெளிவரும் உள்மூலம் (புடைப்பு) மூலக்கட்டி என அழைக்கப்படும். வெளித்தள்ளப்படும் மூலக்கட்டி மீண்டும் உள்ளே செல்லக் கூடியது. காலப் போக்கில் மூலக்கட்டி உட்செல்லாது வெளித் தள்ளிய நிலையிலேயே இருக்கும். இவ்வாறு இருக்கும் போது குதச் சுருக்கத் தசைகள் மூலம் இது நெருக்கப்படுவதால் எந் நேரமும் வலியும் வேதனையும் இருக்கும்.

இதனடிப்படையில் உள்மூலத்தை 4 நிலைகளில் நோக்கலாம்.

1ஆவது நிலை: குதத்தினுள் தூண்போன்று உருவாகும். மலம் கழிக்கும் போது சிறு கட்டியாக விழும். ஏதோ உள்ளது போன்ற உணர்வு இருக்கும்.
2ஆவது நிலை: கட்டி வெளி வந்து உள்ளே போகும்.
3ஆவது நிலை: கட்டி வெளி வந்து விழும்.
4ஆவது நிலை: கட்டி வெளியிலேயே இருக்கும். விழாது.

இந்த 4ஆவது நிலையிலேயே கிருமிகள் உட்புகும் சாத்தியம் அதிகம். எனவே வைத்தியரை உடனே அணுக வேண்டும். ஆனால் பெரும்பாலானவர்கள் வெட்கம் அல்லது கூச்சம் காரணமாக வெளியில் சொல்லமாட்டார்கள் இலகுவாக செய்யக் கூடிய கைவைத்தியம் அல்லது நாட்டு வைத்தியம் செய்து விட்டு இருந்து விடுவர். அநேகமாக ஒரு சில நாள்களுக்கு சூடான உணவை (தவிட்டரிசி, குரக்கன், சாமை, இலைவகை, பழங்கள்) உண்டு தற்காலிக சுகம் பெற்றபின் பூரண குணம் பெற்று விட்டதாக நினைத்துக் கொள்வர். ஆனால் இவ் உள்மூலநிலை தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும்.

குதத்துக்கு வெளியே குதத்தை அண்டிய சருமப் பகுதியில் உள்ள இரத்த நாளங்களில் ஏற்படும் வீக்கம் அல்லது புடைப்பு வெளிமூலம் ஆகும். கடும் மலச்சிக்கல், பாரமான பொருள்களைத் தூக்குதல் போன்றவற்றால் ஏற்படக் கூடியது. சிலருக்கு இது பரம்பரை நோய். வெளிமூலக் கட்டி கருஞ் சிவப்புக் குன்றிமணியின் அளவில் அல்லது பாதாம் பருப்பின் அளவில் இருக்கும். இது மென்மையானது. ஆனால் தொடும் போது வேதனை இருக்கும். இயற்கைக் கடன்

கழிக்கும் போது முக்கி முனகுவதால் புடைப்பு வெடித்து இரத்தம் வெளியேறும். இரத்தம் உறைந்து இரத்தக் கட்டியை உருவாக்கும். இது வெளிமூலம் ஆகும். வெளிமூலம் 10 - 15 நாள்கள் இருக்கும். பின்னர் கட்டி உடைந்து தானாக ஆறும். கடும்இருமல், கர்ப்பம், கல்லீரல், சிரையில் ஏற்படும் அடைப்பு என்பவற்றின் மூலமும் இது ஏற்படக் கூடியது.

**அறிகுறி**

உள்மூலம்: மலம் கழித்தபின் குதப்பகுதியில் எரிச்சல், அரிப்பு, உறுத்தல், பாராமான பொருள் இருப்பது போன்ற உணர்வு என்பன இருக்கும். இரு மாதங்களுக்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை மலத்துடன் இரத்தம் வெளியேறும். மலத்துவாரத்தில் புண் ஏற்படும். (Fissure in Ano)

**வெளிமூலம்:** தொட்டு உணரக்கூடியது. வெளியிலே அவதானிக்கலாம்.

மலச்சிக்கல், வயிற்றோட்டம் என்பன மூலநோயின் எதிரிகளாகக் கூறப்படுகிறது.

கடுமையான வேதனை, இரத்தப்போக்கு என்பவற்றின் போது உடனடியாக வைத்தியரை அணுக வேண்டும். இந்நோய்க்கு பல சிகிச்சை முறைகள் உள்ளன.

i) குளிசைகள்
ii) சத்திர சிகிச்சை
iii) லேசர் கதிர் வீச்சு

சத்திர சிகிச்சை மூலம் மூலக் கட்டிகளை அகற்றலாம். குதவழியின் அளவை அதிகரிப்பதன் மூலம் மலச் சிக்கலைத் தவிர்த்து அல்லது குறைத்து வேதனையைக் குறைக்கலாம். மலத்துவாரத்தில் காய்ந்த மலம் கழியும் போது புண் ஏற்படும். புண் மாறாதுவிடில் அதில் மலம் சிக்கி சீழ்க்கட்டி உண்டாகும். சிகிச்சை செய்யாது விடில் இரு கிழமைகளில் சீழ்க்கட்டி உடைந்து சீழ் வெளிவரும். பின்னர் தொடர்ச்சியான

நீர்க்கசிவு இருக்கும் இதனை வியர்வை என நினைத்து அலட்சியம் செய்து விடுவதும் உண்டு. இதனால் இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். இதனைத் தவிர்க்க மூன்று முறை சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். மூலக்கட்டி தொடர்ச்சியாக இருக்குமிடத்து புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளன. சத்திரசிகிச்சை செய்த பின்னும் தமது கவனக்குறைவால் மீண்டும் இந்நோய் ஏற்படக் கூடியது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.


வெளிநாடுகளில் லேசர் கதிர்வீச்சு முறையில் இந்நோய் குணமாக்கப்படுகிறது. ஊசிமருந்துகள் மூலமும், உள் மருந்துகள் மூலமும் மூலக் கட்டிகள் கரைக்கப்படுகிறன. மூலக் கட்டிக்கு இறப்பர் நாடாவை போட்டு நாளடைவில் கட்டியைக் கரைக்கலாம். வீடுகளில் வெளிமூலத்திற்கு சிகிச்சை அளிக்கும் போது வெந்நீரில் ஒத்தடம் கொடுக்க வேண்டும். பின்னர் பஞ்சு ஒன்றினால் அல்லது மென்மையான உலர்ந்த துணியினால் துப்பரவு செய்ய வேண்டும்.

இந்நோய் ஆரம்பத்திலேயே தவிர்ப்பதற்கு நார்த்தன்மையான உணவு வகைகளை அதாவது பழங்கள், காய், கறிகள், மற்றும் இலை வகை ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் நீரை அதிகளவில் அருந்த வேண்டும். நோய் வந்தபின் துன்பப்படாமல் மேற்குறித்த மாதிரியான உணவுப் பழக்கத்தைக் கைக் கொண்டு நோய் வருமுன் காப்போம்.

**உலகின் அதி உயர்ந்த கட்டடம் மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் கட்டப்பட்டுள்ளது. பெற்றோநாஸ் கோபுரம் (Petro Nas Tower) எனப்படுகின்ற இக்கட்டடம் 1483 அடிகள் உயரமானது.**

**பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரம் 986அடிகள் 4 அங்குலம் உயரமானது.**

# நூல் அறிமுகம்




## ‘உதயத்தைத் தேடி’
## (கவிதைத் தொகுதி)

**நூலாசிரியர் :**

செல்வி தர்மினி கருணானந்தம்

**வெளியீடு :**

தேசிய இளைஞர் சேவைகள்
மன்ற யாழ் கலை இலக்கிய
வட்டம்.

**விலை:** ரூபா 150.00

## பத்திரிகைத் துறை
## (சில நினைவுக் குறிப்புக்கள்)


**நூலாசிரியர்:**

எஸ். பெருமாள்
முன்னாள் ஆசிரியர், ஈழநாடு

**வெளியிடுபவர்:**

திருமதி ஈஸ்வரி பெருமாள்
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

**விலை :** ரூ 150.00



# English Park

## Ha!.... Hah!..... He!.... He!!

Dr: Do you Feel any Improvement after my treatment?
Patient treated for short memory: Yes Sir, Now I forget Only one Slipper; not both.

### FUN WITH WORDS

## *Monsoon Fun*

It's monsoon time again! Don't however let those rainy days dampmen your appetite for F:n. Here's one way to keep that appetite nourished Attempt to build Seven new words out of the Seven alphabets of the word "monsoon". proper names of persons are disallowed.

Time limit – a minute

## Vocabulary Quizzing

Here's a test on word power. You must be aware that almost every word has more than a single meaning when applied differently take this example. The word "address" can have as many as 13 Meanings! The 13 Meanings are: greet, approach, speak to speech, discourse, oration, direct, court, woo, accost, Street and number, residence, home.

Now, For the following five words given, Can you supply atleast five different meanings for each? Check your list of meanings with the one provided in the answers Column. How to score; Every correct meaning carries a point. So, the maximum Score is 25. How you rate your Self:- 25 – excellent; 21 to 24 Very good; 16 to 20-good; 12 to 15 – fair. The five words are:- to abrutopt, alive, donation, power, Second.

## *Sentence Mazes*

Try your skill with the following Sentence mazes. Straighten out each Sentence maze and thus find out what each line of letters forming the Sentence actually signifies. You will discover a pearl of wisdom in each confused set of words.

A ghitl eathtr ivles glon
Ami fro eht ratss
To rer si muhna
to tnhei Oseflwn eb ture
Fdneirpsih plisetuml osyj nad disevid gfsrie.

## *Building Anagrams*

Build anagrams of the five words given:-

1) bat
2) Came
3) Pin
4) Mile
5) Ties

**Answer**

**Monsoon Fun**

1) On
2) No
3) So
4) Son
5) Soon
6) Moon
7) noon

## *Vocabulary quizzing:-*

abrubt: Sudden, hasty, Short, Curt, Precipitous, Steep, sheer, Sharp,
alive: Living, animate, breathing, quick, quick witted, alert, brisk, spry.
Donation: gift, present, benefaction, Contribution, grant.
Power: Might, Force, Sway, Control, Omnipotence, authority.
Second: Moment, trice, interval, lower part, lower voice, Supporter, assistant.

## *Sentence mazes:*

A light heart lives long
Aim for the stars
To err is human
To thine own self be true
Friendship multiplies joys and divides griefs.

## *Building Anagrams*

1) Tab
2) Mace
3) nip
4) lime
5) Site

# அமெரிக்க புலனாய்வுப் பிரிவு

மேற்கு ஜெர்மனிய நிபுணரர்களது கூற்றுப்படி, அமெரிக்காவின் உளவுச் சேவைகள் திரட்டும் சகல இரகசியத் தகவல்களிலும் அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை (சிஐஏ) ஐந்து சதவீதத்தை மாத்திரமே திரட்டுகிறது. எஞ்சிய 95 சதவீதத்தைத் தேசியப் பந்தோபஸ்து ஏஜென்ஸி (என்.எஸ்.ஏ.) வழங்குகிறது. தேசியப் பந்தோபஸ்து ஏஜென்ஸி அமெரிக்காவின் மிகவும் கூர்மையான செவி, அமெரிக்காவின் சகல உளவுச்சேவைகளிலும் பரம இரகசியமானது. உலகம் முழுவதிலும் நடக்கும் சம்பாஷணைகளை அது இரவு பகலாகச் செவி மடுக்கிறது.

**கணனிகளால் கண்காணிக்கப்படும் அதி உச்சப் பாதுகாப்புக் கொண்ட அமெரிக்காவை நோக்கி உலகின் எந்த மூலையிலிருந்தும் ஒரு பீரங்கிக் குழாய் குறிவைக்க நினைக்க முடியாது. அத்தகைய கண்காணிப்பு, 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி ....... உள்நாட்டுப் பயணிகள் விமானங்கள் நான்கு, ஒரே சமயத்தில் கடத்தப்பட்டபோது தூங்கிப் போனது ஏன்?**

**உலக வர்த்தக மையத்தின் வானுயர் கோபுரங்கள் இரண்டும் தாக்கப்படும் வரை விமானங்கள் ஆயுதங்களாகக் கணிக்கப்படவில்லையே!**

தனக்கேயுரிய விசேட உரிமைகள் காரணமாகப் பெறப்பட்ட விரிவான அதிகாரங்களும், சட்டப் பாதுகாப்பும், எவ்வேளையிலும் செயல்படுவதற்குத் தயாராக இருக்கும் பந்தோபஸ்துப் பிரிவும், கண்காணிப்புப் புகைப் படக் கருவிகளும் எலக்ட்ரோனிக் பாதுகாப்புத் திரைகளும் பொருத்தப்பட்ட முட்கம்பி வேலியும், கொண்ட இந்த அமைப்பு பிரதானமாகத் தனது சொந்த விருப்பப்படி அரசியல் தலையீடின்றி செயல்படும் ஸ்தாபனமாக மாறியுள்ளது.

இந்த அமெரிக்கா உளவுச்சேவை, சகல விஷயங்களையும் கூர்ந்து அவதானிக்கிறது. மொஸ்கோவில் என்ன கூறப்படுகிறது, சுவிஸ் வங்கியாளர்கள் நியூயோர்க்கில் விற்கப்போகும் பங்குகள் எத்தனை, மேற்கு பெர்லினிலுள்ள "எதிரணியினர்" உள்ளூர் சமூக ஜனநாயக வாதிகளைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் போன்ற தகவல்களைத் திரட்டுகிறது. நேய மற்றும் குரோதமான சேவைகள் ஒன்றுக்கொன்று என்ன கூறிக்கொள்கின்றன, வாஷிங்டன் போஸ்ட் எந்த விதமான கட்டுரைத் தொடர்களைப் பிரசுரிப்பதற்குத் திட்டமிடுகிறது, சில அதிகாரிகள் தமக்குக் கீழுள்ளவர்களுக்கு இரவு நேரங்களில் எவ்வாறு விருந்தளிக்கின்றனர் என்பதெல்லாம் தேசியப் பந்தோபஸ்து ஏஜென்ஸிக்குத் தெரியும்.

அமெரிக்க ஜெனரல்களின், அரசியல் வாதிகளின் கட்டளையின் பேரில், எல்லாக் கண்டங்களிலும் செவிமடுப்பு நிலையங்களை எலக்ரோனிக் இயந்திரவியலாளர்கள் அமைத்துள்ளனர். அமெரிக்காவின்

பந்தோபஸ்தை சிறிய அளவிலேனும் பாதிக்கக்கூடிய தனியொரு சமிக்ஞையையும் தனியொரு கட்டளையையும் தனியொரு சம்பாஷணையையும் மின் காந்த அலைகளின் சமுத்திரத்தில் தவற விடாமல் இருக்கும் பொருட்டு அமெரிக்க அரசு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டாலர்களைச் செலவிடுகிறது. பந்தோபஸ்துத் துறையில் அமெரிக்காவின் சட்டபூர்வத் தேவைகளின் கட்டமைப்புக்கு வெளியே - வெகு தொலைவிலிருந்து வரும் ஒலிகளைக் கூட - உணரும் வகையில் வாஷிங்டனின் "இராட்சதக் காதுகள்" பெருவீதத்திலும் பிரம்மாண்டமான வகையிலும் செயல்ப்படுகின்றன.

வாஷிங்டனுக்கு வடகிழக்கே சுமார் முப்பது கிலோ மீட்டர்கள் தொலைவில் மேரிலேண்ட் குன்றுகளில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் தலைமையகத்தில் பல்லாயிரக்கணக்கான உளவுச் சேவை அதிகாரிகள் பணி புரிகின்றனர். கட்டளை பிறப்பிக்கும் அதிகாரிகள் பிளேக்சிட்டியிலுள்ள இராணுவத்தளத்தில் இருக்கின்றனர். ஏனைய பகுதியிலிருந்து வேலியமைக்கப்பட்ட ஒரு சிறிய நகரம் இது. இதில் தேசிய பந்தோபஸ்து ஏஜென்ஸியின் ஊழியர்கள் அன்றாட வாழ்வில் தமக்குத்தேவையான சகலதையும் (சிகையலங்காரம், முடித்திருத்தும் கடை, நூலகம், சுற்றுப் பணியகம், நீர் மற்றும் விநியோக அமைப்புகள், தொலைக்காட்சிக் கலையகம், இடைநிலைப் பாடசாலை, கோல்ஃப் மைதானம் போன்றன) பெற்றுள்ளனர். தேசியப் பந்தோபஸ்து ஏஜென்ஸிக்கான சொந்த ரோந்துக் கார்கள் உள்ளன. ரொனால்ட் றீகனின் காலத்தில் 35 ஆயிரமாக இருந்த இந்நகர மக்கள் தொகை இப்போது அதிகரித்துள்ளது.

தலைமுறை தலைமுறையாக இப்பகுதிகளில் வாழ்ந்தவர்களும், அமெரிக்கக்கண்டத்தைக் கடவுளின் ஆசீர்வாதம் பெற்ற மண்ணாகக் கருதுபவர்களுமான குடும்பங்களைச் சேர்ந்த 'தேசபக்த' அமெரிக்கர்களுக்கே வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவர்கள் தமது குடும்பங்களுக்கே அயல்மொழிகளைக் கற்பிக்கின்றனர். உள்ளூர் மக்களிடமிருந்து தனித்தொதுங்கி வாழ்கின்றன.

இந்த இராட்சத ஊழியர் படையில் மிகச் சிறந்த கணிதவியலாளர்களும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் நூற்றுக் கணக்கில் உள்ளனர். பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் (நியூஜேர்ஸி) அவதான நிலையம் தனது சொந்த கம்பியூட்டர் உற்பத்தி ஆலையைக் கொண்டுள்ளது. செய்தி நிறுவனங்களின் கூற்றுப்படி, தேசியப் பந்தோபஸ்து ஏஜென்ஸி, கம்பியூட்டர் தொழில்நுட்பவியல் போன்ற துறைகளில் ஏனையோரைக் காட்டிலும் எப்போதுமே ஐந்து ஆண்டுகள் முன்னுள்ளது.

(நன்றி -
சம்பவங்களும் உலகமும்
சஞ்சிகையிலிருந்து)

# உயிர்ப்பிழக்கும் உணர்வுகள்



ச. சாரங்கா
பலாலி ஆசிரியர் கலாசாலை
திருநெல்வேலி.

விஷ்ணு உரக்கச் சிரித்தான். அவனோடு சேர்ந்து வேணியும் சிரிக்க ஆரம்பித்ததும் வீடு முழுவதும் சிரிப்பாய்க் குலுங்கிற்று. ஒரே சிரிப்பு. பிறகு சிறு அமைதி. அடுத்த நிமிஷத்தில் "கிளுக்" என்று வேணியிடம் பொங்கும் சிரிப்பு அது கதை சொன்ன விஷ்ணுவிடம் தொற்றுவது இயல்பு.

"என்ன உங்கை சத்தம்... சிரிப்பென்ன வேண்டிக் கிடக்குது.....?" செல்லம்மா குசினிக்குள்ளிருந்து கத்தினாள். அவளுக்குத் தெரியும், சிரிப்பில் தான் எல்லாம் ஆரம்பமாகும். பிறகு வலுத்த வாய்ச்சண்டையிலோ நுள்ளுதல் அடித்தலிலோ அது முடிவாகும்.

"குட்டிச் பிசாசுகளே... என்னைக் 'கொண்டு' போட்டு இருந்து சிரியுங்கோ...."

அவளின் கத்தலோடு வீடு நிசப்தமாய்ப் போயிற்று 'இதுகளின்' சிரிப்பு அவளுக்கு எப்பவும் நாராசந் தான். மகனது வாழ்வில் கூட சிரிப்பைத் துடைத்து விட்ட அவளுக்கு 'இதுகள்' எம்மாத்திரம்?

அழகான குழந்தைகள். சுட்டிகளும் தான். ஆனால் அதிஷ்டத்தைத் தான் குறைச்சலாகக் கொண்டிருக்கின்றன என்பது மாலதியின் நம்பிக்கை. வாழ்க்கைச் செலவு படிகளின் வழியே ஏறாமல், பாயவும் பறக்கவும் கற்றுக் கொண்டிருந்ததில் இவர்கள் ஏழ்மைக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாமற் போயிற்று. துணிச்சலாக,"காப்பாற்றுவேன்" என்று கைப்பிடித்தது மட்டுமன்றி அடுத்தடுத்த வருடங்களில் இரு குழந்தைகளுக்குத் 'தந்தை' என்ற பொறுப்பும் வந்த பிறகு குடும்பச் சுமை முதுகில் ஏறியிருந்து அழுத்திற்று அவனை. ஒருநாள் அன்பின் நெகிழ்வில் அவளைக் கேட்டான்.

"இஞ்சையிருந்து என்ன செய்யிறது? நான் வெளியிலைபோயிட்டா ..... ஏதாவது மாற்றம் வருதோ .... என்னமோ?..."

"உங்களை விட்டிட்டு....."

அவளுக்கத் தொடரமுடியாமல் தொண்டை அடைத்தது.

"ரெண்டு வருஷம் உழச்சிட்டா.... குடும்பத்தைக் கூப்பிடலாமாம். பெடியள் சொல்லுறாங்கள்........."

குட்டி மகளுக்கு 'லக்ரோஜன்' வாங்க வழியில்லாத சீவியம். அவளுக்கு மட்டுமல்ல மாமி, தங்கைகள் இருவருக்கும் கூட அவன் ஒருவன் தான் பலம். மெல்லத் தலையசைத்தாள் அவள்.

இப்போது அவன் போய் ஆறுவருடங்களுக்கு மேலாகி விட்டது. வீடு வாசலில் 'வெளிநாட்டுப்பணச்' செழிப்பு. குழந்தைகள் வளர்ந்து விட்டார்கள். ஆனால் இன்னமும் 'அவளைக்' கூப்பிட முடியவில்லை அவனுக்கு. அவன் அனுப்பும் லட்சங்களை விழுங்கக் காத்திருக்கின்றன பொறுப்புக்கள். அவன் போனவுடன் அம்மா எழுதிய கடிதத்தின் போக்கு இன்னமும் மாறாது பணம் வேண்டிக் கொண்டே இருக்கிறது.

"..........உன்னை நம்பித்தான் தங்கச்சிமார் ரெண்டுபேர் இருக்கினம். மறந்திடாதை தம்பி. உனக்கெண்டு குடும்பமும் பேர் சொல்ல ரெண்டு பிள்ளையளுமாய்ப் போச்சு. 'அதிலையும்' அவசரப்பட்டிட்டாய். தங்கச்சிமாரின்ரை பேரிலை ஆளுக்குப் பதினைஞ்சு இருவதை எண்டாலும் போட்டிட்டா கொஞ்சம் நிம்மதி. வீடு திருத்துறம், வேறை என்ன. உன்ரை பெடியள் நல்லாய்ப் படிக்குதுகள் மல்லிகா சந்தோஷமாய் இருக்கிறாள். இஞ்சை பிரச்சினை ஒண்டுமில்லை. காசைத் தவிர......"

அம்மாவின் கடிதச் சுருக்கம் இந்த சாராம்சத்தை மாற்றமின்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. உழைப்பு, உழைப்பு, உழைப்பு, வேறு எதுவுமே இல்லை. "மல்லிகா சந்தோஷமாய் இருக்கிறாள்" என்ற வரியையே பார்த்துக் கொண்டிருப்பான் அவன். அவனுக்குத் தெரியும், அந்த வரி ஏன் சேர்க்கப்பட்டதென்று. ஆனாலும் அம்மாவை மீறி குடும்பத்தை அழைத்துக் கொள்ள முடியாது அவனுக்கு. மல்லிகா அவனது வாழ்வின் வரம். அன்பும் பொறுமையுமுடைய அவளுடனும் குழந்தைகளுடனும் ஒன்றாக வாழப் போகும் காலம் அவன் மனதெல்லாம் நிறையும். அதுவே அவனை இரவுபகல் பாராது உழைக்க நெட்டித் தள்ளிற்று.

மல்லிகா அமைதியானவள். எதையும் சண்டை போட்டுப்பெற்றுக் கொள்ள முடியாது அவளுக்கு.

"வேணி தவழுதப்பா...."

∴போனில் சொல்லுவாள்

"ம்........"

"இப்ப அப்பா சொல்லுறாள், உங்கடை படத்தைத் தொட்டுக் காட்ட 'அப்பா' சொல்லுறாள் ....."

அவன் மனம் அன்பில் நெகிழும். பிரிவின் துயரம் அவனைப் பிழியும்.

"மாலி..."

அவன் குரல் கரகரக்கும். அன்பில் ஆழ்ந்த துயரம் அது,

அவள் அமைதியாக இருப்பாள்.

"மாலி .... சந்தோஷமாய் இருக்கிறியா....?"

"ம்...."

"நான் உங்களைக் கூப்பிடத்தான் பார்க்கிறான். காசைச் சேமிக்க ஏலுதில்லை மாலி, தங்கச்சியவைக்கு......."

"தங்கச்சியவை தானே .....உங்கடை பொறுப்பும் தானே....."

"நீயும் பிள்ளையளும் வந்திட்டா..... இன்னும் உற்சாகமாய் உழைக்கேலும் மாலி...."

இயலாமையோடு முனகுவாள் இவள். வேணிக்கு ஐந்து வயதாகிறது. இன்னமும் நிலையில் மாற்றம் இல்லை.

மாலதிக்கு சில வேளைகளில் செல்லம்மாவின் செய்கைகளைப் பொறுக்கவே முடியாமருலிக்கும். மகளவை இருவரும் அதே தாயின் குணநல வார்ப்புக்கள். காசை ஓடுந் தண்ணீராய் எற்றியெறியும் அலட்சியம். பெருமைக்காக - பகட்டுக்காக - அவர்கள் நீராய் ஊற்றும் பணம், உண்மையில் அவனது இரத்தம் இல்லையா? கொடுங்குளிர் இரவுகளில் இமைமூடாத அவன் உழைப்பு இல்லையா? இவர்களுக்கு ஏன் புரியவில்லை? அவள் மௌனமாய் அழுவாள். வேறென்ன செய்யமுடியும் அவளுக்கு?

"அண்ணா...... எங்கடை வகுப்பிலை எல்லாரும் பஞ்சாபி... குஷ்பு செற் எண்டு எத்தினை விதமாய்ப் போடீனம்....."

"நீயும் வாங்கீம்மா....."

"அப்பா இருந்திருந்தால் .... நாங்களும் போட்டிருக்கலாம் தானே...."

அவ்வளவும் போதும். அவனை முழுதாய் உடைந்து போகச்செய்ய. பிறகு வழமையான 'அனுப்பல்' தான். அவர்கள் 'பணம் கறக்கும்' வித்தையைச் சொல்லிக் கொடுக்கமாலே கற்றுக் கொண்டிருப்பதாய்த் தோன்றும் அவளுக்கு. மீன்குஞ்சுகளுக்கு நீந்துவதற்கு தெரிந்தே இருப்பது போல.

"தங்கச்சி பெரிசாகீட்டாள் தம்பி...."

"நல்லம்..."

அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல் இருக்கும்.

"இப்ப கொஞ்சம் 'மரியாதையாச்' சீவிக்கிறதிலை நல்லாய்த்தான் செய்வேணும்....."

"ம்....."

"ஊர் முழுதுக்கும் தெரியவேணும் 'செல்லம்மா' ஆரெண்டு.... தம்பி... ஒரு ரெண்டு மூண்டு அனுப்ப ஏலுமே....."

"ம்..... இப்ப வேலை செய்யக் கஷ்டமம்மா...."

"தட்டிக் கழிக்கப் பார்க்கிறியேடா தம்பி ...." இவன் இதயம்பிளக்கும் சொற்கள்.

"ச்சீ ..... சின்ன ஒப்பிரேசன் செய்ததில பாரவேலையள் செய்யேலாமைக் கிடக்கு ......"

"நீயும் குடும்பகாறன்....சேமிக்கவும் வேணுந் தானே ....."

"ஏனம்மா..... இப்பிடி...."


இவன் மேலே கதைக்க முடியாமல் நிற்பான்.செல்லம்மா "டக்" என்று .ு.போனை வைப்பாள். இனிக் காசு வரும்.


"ஆடுற மாட்டை ஆடிக் கறக்கவேணும். பாடுற மாட்டைப் பாடிக் கறக்கவேணும்......."


கண்களைச் சிமிட்டிச் சொல்லும் செல்லம்மாவின் வித்தைகள். மகள்களுக்கும் கைவரப் பெற்றிருந்ததில் மாலதியின் மீட்சி பற்றிய


## உஷ்! என்ன!!


பிரயாணி:
(புகையிரத நிலையத்தில் அவசரமாக ஓடிவந்தவர்)
ஆறு மணிரயில் போய்விட்டதா?
ரயில் நிலைய அதிகாரி:
அது இன்று 12மணி நேரம் லேட்டாம்
பிரயாணி:
அடே! நல்ல காலம்! கடவுள் காத்தது! நான் ரயிலைத் தவற
விட்டு விட்டேன் என்று பயந்து விட்டேன்.






தினமும் இரவு ஒருமணி நேரம் மின் தடங்கல் ஏற்படுத்தி எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் மின்சார சபைக்கு எங்கள் மனமார்ந்த நன்றி!
கொள்ளையடிப்போர் சங்கம்


"ஞாபக மறதிக்காகத்தானே ட்ரீட்மென்ட் எடுக்க வந்தீங்க...?"
"அட, ஆமாம் எப்படிக்கண்டு பிடிச்சீங்க டாக்டர்....?"


"உங்க மனைவிக்கு 'டான்ஸில்ஸ்' ஆபரேஷன் செய்ய வேண்டும்
"ஆப்ரேஷனுக்குப் பிறகு பேச்சு பாதிக்கப்படுமா டாக்டர்?! "
"அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது..."
"அப்ப அந்த ஆப்ரேஷனால என்ன தான் டாக்டர் உபயோகம்....?"

கனவுகள் மிகத் தூரத்திலேயே வசித்து வந்தன. ஆனால் அமைதியான பொழுதில் மீண்டும் மீண்டும் கிளரும் ஞாபகங்கள், இப்போது வீதிவழி நடக்கையிலும் மனதேறி வருத்துகின்றன. மாலதி வீட்டினுள் நுழைந்த பொழுதில் வீடு நிசப்தமாய்க் கிடந்தது. காலையில் 'மார்கெற்' றுக்குப் போய் 'மரக்கறி' வகைகள் வாங்குவது அவள் பொறுப்பு.

"சின்னனுகள் சந்தைக்குப் போக வெக்கப்படுதுகள்.... எனக்கும் நடக்கேலாமல் கிடக்குது....'

அதே 'சின்னனுகள்' தியேட்டரில் படம் பார்க்கப் போவது பற்றி நினைத்தாலும் மாலதி கேட்கவில்லை. ஆக காய்கறி வாங்குவது தொட்டு சமையல் வரை வேலைகள் அவள் மேல் பொறிந்தே கிடக்கின்றன.

"நீ போனநேரந் தொட்டுச் சிரிப்பும்.... சத்தமுந் தான். அதென்ன கண்டிப்பில்லாமல் செல்லங் குடுத்தா இப்பிடித் தான்....."

அவள் கையிலிருந்த கூடையை, மேசையில் வைத்து விட்டுப்பிள்ளைகளைப் பார்த்தபோது விஷ்ணு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். வேணி அம்மாவின் முகத்தைப் பரிதாபமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் காலைப்பொழுதின் தொடக்கத்தைக் கவனியாதே தன் மனமெல்லாம் அப்பும் இருளை, கனதியை காட்டிக் கொள்ளாமலே சமையலறைக்குள் புகுந்தாள் அவள். வேணி எழும்பித் தாயின் பின்னால் ஓடிற்று. விஷ்ணுவும் தங்கையைத் தொடர செல்லம்மாவின் 'அர்ச்சனை' மீண்டும் ஆரம்பமானது.

தொலைவில் அழகான உயர்ந்த கட்டிடம் ஒன்றைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான் மதன். மனதினுள் மாலதியும் குழந்தைகளும் தான். அருகே செழிப்பாய்ச் சுழிக்கின்ற நதிக்கரை. இன்னும் தண்ணீர் உறையவில்லை. குளிர்காலந்தான். ஆனால் இன்னமும் தன் கொடுமுகங் காட்டாதிருக்கிறது அது. ஆற்றோர மரங்களில் இனந்தெரியாத சோகம் படர்ந்திருப்பதாய்ப் பட்டது அவனுக்கு. 'வெள்ளைகள்' அங்குமிங்கும் அடர்த்தியாக உலவிக் கொண்டிருந்தாலும் அவன் அவர்களின் முகம் நோக்குவதில்லை. அவர்களும் தான். அவனது இலக்கெல்லாம் வேலை. வேலை ஒன்று தான். பகல் இரவு பாராத உழைப்பு. வேலைகளில் கௌரவம் இல்லை.

"புதுவருஷத் தோடை மல்லிகாவைக் கூப்பிடன்...."

ஒவ்வொரு வருஷ இடைவெளிகளிலும் அம்மா சொல்லும் கதைதான். பிறகு வருஷத் தொடக்கத்தில் மட்டும் அமைதியாய் இருந்து விடுகிறாள். புதிய வருடம் பிறக்கப் போகிறது. இனியும் தயங்க முடியாது. அவன் நேரடியாகவே தாயிடம் சொல்லி விடப் போகிறான். மீதப் படுத்திய கொஞ்சப் பணத்துடன் ராஜனின் உதவி போதும். அவனைச் சந்திக்கத் தான் போய்க் கொண்டிருக்கிறான். இப்போது கட்டிடத்தின் முன்னால் ராஜனின் கார். "அப்ப ......உங்கடை ஆக்களும் வரப்போகினம்."

சிரித்தபடியே கேட்டவனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"ம்...."

"காசைப் பற்றிப் பிரச்சினைப்படாதை மதன். அது என்ரை பொறுப்பு. அம்மா ஓமெண்டிட்டாவோ ..........."

ராஜனுக்கு இவன் குடும்ப விஷயம் முழுதும் தெரியும். ஊரவன்.
"வருஷம் வரட்டும் ....... எதையெண்டாலும் செய் எண்டவ........"
"அது போதும், அதோடை 'மனிசியைக்' கூப்பிடு மச்சான்....."
"ம்.... உன்ரை பாடு எப்பிடி?"
பதில் ஏதும் சொல்லாமல் வீதியை வெறித்துப் பார்த்தபடியே காரைச் செலுத்திக் கொண்டிருந்தான் ராஜன். பிறகு சடுதியாய்த் திரும்பி இவன் முகம் பார்த்தான்.
"குடிக்கிறன் மச்சான்.... குடிதான் வாழ்க்கை...... இல்லாட்டிக்குச் சமாளிக்கேலாது....."
"நிலானியை நினைச்சுக் கஷ்டப்படுறயா .... விடடா அதை...."
"அவளை மறந்தாச்சு. என்ரை குடும்பப் பொறுப்புகளை முடிக்கும் வரைக்கும் காத்திருக்கவும் ஏலாது தானே அவளுக்கு...."
"ம்...."
"உழச்சுக் களைச்சிட்டன் மச்சான். நாம்பன் மாடு எண்டு நினைக்கிதுகள்.... நுகம் முறியப் பாரம் ஏத்துதுகள்..."
இதுதான். அவனது நிலையும் கூட இதுதான்
"இப்ப எல்லாத்தையும் உதறீட்டன்.... அம்மாவையோடை தொடர்பு இல்லை, காசு கையிலை தாராளமாய்க் கிடக்கு...."
"ம்..."
"அன்பாயிருக்க ஆக்கள் இல்லை. அதுக்காய் நான் துன்பப்படேல்லை. ஏனென்டா அன்பு எண்டுறது பொய், கட்டுக்கதை...."
அவனை மாற்ற முடியாது. வாழ்க்கையில் விரக்தி. வெளியில் பகட்டான இச்சைவழி இயங்கும் வாழ்வு.
"என்ரை கதையை விடு மச்சான். நீ குடும்பத்தைக் கூப்பிடு முதலிலை....."
"ம்..."
பணவிஷயம் எல்லாம் கதைத்தார்கள். வீடு போகும்போது மனதில் துணிவு வந்திருந்தது. மாலதியிடம் கதைக்க வேண்டும். அவள் பூமுகம் பார்த்து வாழும் காலம் இதோ வந்து விட்டது.

அறைக்குப் போய்க் கட்டிலில் விழுந்தான். ராஜன் சொன்ன 'காளைமாடு' நினைவில் ஏறிற்று. இவனுக்கு நல்ல ஞாபகம். சின்னவயதில் வெள்ளைப்பசு 'நாம்பன்' கன்று ஈன்றபோது அப்பா நிறையச் சந்தோஷப்பட்டார்.

"அது நல்லதுக்குத் தான். நல்ல இன நாம்பன் கணடு..... வளர்ப்பம்...."

கண்ணின் மணியாய்ப் போற்றி வளர்த்தாகள அதை. ஒரு நல்ல நாளில் மூக்கணாங்கயிறு போட்டாயிற்று. பிறகு நுகஞ்சுமந்தது. ஒற்றை மாட்டு வண்டில் வாழ்வு அதனதாய்ப் போனது வயல விளைவை அல்லது மறைமுகமாகக் குடும்பததையே சுமந்தது அது தன்னால முடியுமான சுமையை மட்டுமன்றி சுமக்க முடியாத சுமைகளையும் சுமக்கக்கற்றது. சிலபொழுதில் மட்டும் கண்ணீர் வழிந்திருக்கும் பெரும்பாலும்

வேதனைகளில் சுருங்காத முகம். இவன் அன்பாய் வருடினால் தோலினைச் சிலிர்க்கும். உழைக்க வேண்டியது அதன் விதியென்றும் - அதை மீற முடியாதென்றும் - கண்டு அவ்விதியை அது ஏற்றுக் கொண்டதாய்த் தோன்றும் அவனுக்கு. தானும் அவ்விதமே ஒரு 'வண்டில்மாடு' வாழ்வை வாழ்வது பற்றிய துன்பம் மனதில் கசப்பாய் மண்டப் படுத்திருந்தான் அவன். எழும்பிய போது யன்னலோர மேசையில் நீலவர்ணக்கடிதம். மாலதியதோ எனப் பாய்ந்தெடுத்தபோது, கோழிக் கிறுக்கலில் விலாசம் இருந்தது. அவன் கரங்கள் நடுங்கின. அம்மாவின் கடிதங்கள் மிக நெருக்கடியான விஷயங்களையே காவியிருக்கும். "எப்பிடித் தம்பி சொல்லுறது.... அது தான் விளக்கமாய் எழுதினன்...." பிறகு அம்மா தான் அனுப்பி வைக்கச் சொன்ன தொகைக்கு மனங்குறுகுவதான பாவனையுடன் சொல்லிக் கொள்வாள்.

கண்கள் கடிதம் மேய்ந்தன. சுருக்கமாகத் தான் இருந்தது.

தம்பி,

இந்தக் கடிதத்தை நான் மனம் விரும்பி எழுதேல்லை. நீயும் கஷ்டப்பட்டுத்தான் உழைக்கிறாய். எங்களுக்குத் தெரியும். மாலதியை நாங்கள் பூப்போல பார்க்கிறம். அவளுக்கு ஒரு குறையும் இல்லை. பிள்ளையள் நல்ல சுட்டியள். புருஷனோடை சேர்ந்திருக்கத்தான் பலன் இல்லை. எதோ ஒரு காலம் வருந்தானே.

விஷயம் என்னெண்டா, இவள் மீனா ஒரு எஞ்சினியர் பொடியனை விரும்புறாள். அவைக்கும் விருப்பம். ஒரு 'நாப்பது' வரையிலை நகையாய்க் காசாய்த் தரலாமாம். வீடு வளவும் குடுப்பம். புதுவருஷத்திலை அவளை ஒரு பக்கம் கரை சேர்த்திட்டா பிறகு நீ நிம்மதியாய் மாலதியைக் கூப்பிடலாம்.

குறிப்பு: இந்தப் பெடியனைச் செய்யாட்டிக்கு மீனா தனக்குக் கலியாணம் வேண்டாமாம். தம்பி, அவருஞ் செத்தாப்பிறகு நீ ஒருத்தன் தான் எனக்குத் துணை. கைவிடமாட்டாய் எண்டு நம்புறேன்.

அன்புடன்
அம்மா

மனம் முழுதும் விபரிக்கவியலாத உணர்வுகளை உணர்ந்தான் அவன். வெறும் 'பணங்காய்ச்சி' மரம் தானா இவன்? இவன் உணர்வுகளைக் கவனிக்க எவருமில்லையா? மாலதியைப் பிரிந்தது அவன் விதியா? கேள்விகள் பெருகின.


ஆறுதலாக நடந்து சென்று பெட்டியைத் திறந்து அதை எடுத்தான் அவன். கனடாவாசி அவனெனும் குடியுரிமைச் சீட்டு அது. சுக்குநூறாய்க் கிழித்தெறிந்தான் அதை. கட்டிலில் தொப்பென்று விழுந்து சின்னஞ் சிறுவனைப் போல தேம்பியழத் தொடங்கினான் அவன்.

அடுத்த இதழில்......

**புலவர் ம. பார்வதிநாத சிவம்**
எழுதும்

**காதல் நிகழ்வில் கண்களின் பங்கு!**

## சுயதொழில் வழிகாட்டி



# கோழி வளர்ப்பு

ஏ. ஹென்றி
ஆசிரியர்
சென். ஜோன்ஸ் கல்லூரி

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்தே கோழி வளர்ப்பு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. கோழிகளின் தாயகம் ஆசியாக் கண்டமாகும். உலகில் 60 - 70 வரையிலான வர்க்கங்கள் உள்ளன. இதில் 20 - 25 வரையான வர்க்கங்களே மனிதனால் இலாபநோக்கில் வளர்ப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. வான் வகை களினின்றே இவை தோன்றியுள்ளன. வான்கோழிகளின் இனங்கள் நான்காகும் அவையாவன.

அவையாவன.

i) Golus golus - கபில நிறத்தவை
ii) Golus nepatis - இந் நாட்டிற்குரியன
iii) Golus senevat - சாம்பல் நிறத்தவை
iv) Golus menius - பல்வேறுபட்ட நிறங்கொண்டவை

மேற்படி வகைகளில் Golus golus இனத்தினின்று தற்போது வளர்க்கப்படும் வர்க்கங்கள் உருவாகி உள்ளன. கோழிகளிலிருந்து பெறப்படும் பயன்களின் அடிப்படையில் அவற்றை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்:

i) முட்டை இனங்கள் - (முட்டை வகை)
ii) இறைச்சியினங்கள் - (இறைச்சி வகை)
iii) முட்டைகளையும் இறைச்சிகளையும் பெறக்கூடிய இனங்கள் - (இருநோக்க வகை)

| இயல்புகள் | | முட்டை வகை | இறைச்சி வகை | இருநோக்க வகை |
|---|---|---|---|---|
| நிறை | சேவல் | 2-2.5kg | 4-6kg | 3-4kg |
| | பேடு | 1.5kg | 2.5-3kg | 2-2.5kg |
| இறைச்சி வளர்ச்சி | | தாமதமானது | வேகமானது | மிதமானது |
| பால் முதிர்ச்சி | | 5-6மாதத்தில் | 8மாதத்தில் | 7-8மாதத்தில் |
| வருடாந்த முட்டை உ/தி | | 225 - 230 | 120 | 130 |
| இறைச்சியின் தன்மை | | தரங்குன்றியது நார்த்தன்மையா -னது | தரமானது | மிதமானது |
| தசை - என்பு விகிதம் | | கூடுதலானது | குறைவானது | நடுத்தரமானது |
| முட்டையின் நிறம் | | வெள்ளை | கபிலம் | கபிலம் |
| முட்டையின் பருமன் | | பெரியது | நடுத்தரமானது | நடுத்தரமானது |
| நாளொன்றுக்கு உணவு உட்கொள்ளும் அளவு | | 150 – 175g | 300g | 250g |

| உற்பத்தி | வர்க்கங்கள் |
|---|---|
| அமெரிக்க வர்க்கம் | (White dot, Plymonthprock wine rock)<br>வைற் டொட் பிளிமத் றொக் வைன் றொக் |
| மத்தியதரைக்கடல் வர்க்கங்கள் | முட்டைக்காக வளர்க்கப்படுவன<br>(White legharn) – வெள்ளை லெக்கோன்<br>(Brown legharn) – கபில லெக்கோன்<br>(Ancona) அங்கோனா<br>(Minoca)மைநோக்கா |
| அவுஸ்திரேலிய வர்க்கம் | (Australop) ஒஸ்ரலொப் |
| இங்கிலாந்து வர்க்கங்கள் | (Australop) ஒஸ்ரலொப்<br>(White Rock) ஒஸ்ரலொப்<br>(Cornius)கோர்ணிஸ் |
| ஆசிய வர்க்கங்கள் | அசில், வெள்ளடியன், பிரமா, இந்தியன் கேம் |

## கோழி இனங்களின் பண்புகள்

இனக் கோழிகள் சிலவற்றின் நிறம், நிறை அமைப்பு முட்டை உற்பத்தி போன்ற பண்புகளின் பட்டியல்

| வர்க்கங்கள் | நிறம் | பூ அமைப்பு | முட்டையின் நிறம் | முட்டையின் தொகை (ஆண்டுக்கு) | நிறை kg | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பேடு | சேவல் |
| லெக்கோன் | i.வெள்ளை<br>ii.கறுப்பு<br>iii.கபிலம் | தனிப்பூ<br>றோஸ் பூ<br>கற்றை பூ | வெள்ளை | 240 | 2kg | 2.7 kg |
| மைநோக்கா | i.வெள்ளை<br>ii.கறுப்பு<br>iii.(Buff)பா·ஃவ் | தனிப்பூ<br>தனிப்பூ<br>றோஸ் பூ | வெள்ளை | 200 | 2.25 kg | 3kg |
| அஸ்கோனா | கறுப்பு | தனிப்பூ<br>றோஸ் பூ | வெள்ளை | 200 | 2kg | 2.7 kg |
| றோட்தீவு சிவப்பு (Rhode Island Rd) | i.வெண்சிவப்பு<br>ii.கரும் சிவப்பு | தனிப்பூ<br>றோஸ் பூ | கபிலம் | 180 | 2.75 kg | 3.5 kg |
| பிளிமத்றொக் | i.வெள்ளை<br>ii.கறுப்பு-வெள்ளை வரி | தனிப்பூ | கபிலம் | 165 | 3.2 kg | 4kg |

| இனம் | நிறம் | பூ அமைப்பு | முட்டையின் நிறம் | முட்டையின் தொகை ஆண்டுக்கு | நிறை kg பேடு | சேவல் |
|---|---|---|---|---|---|---|
| நியூகாம் சயர் சயர் | பொன் நிறம் | தனிப்பூ | கபிலம் | 180 | 2.7kg | 3.5kg |
| வெள்ளைறொக் | 1.வெள்ளை 2.கறுப்புஇறகுகள் 3.வெண் மஞ்சள் | றோஸ்பூ | கபிலம் | 180 | 2.9kg | 3.8kg |
| ஒஸ்ரலொப் | 1.கறுப்பு | தனிப்பூ | கபிலம் | 180 | 2.7kg | 3.5kg |
| சஸெக்ஸ் | 1.வெள்ளை, கறுப்புஇறகுகள் | தனிப்பூ | கபிலம் | 180 | 3kg | 3.7kg |
| கோர்ணீஸ் | வெள்ளை, சிவப்பு Buff | அரைவட்டமானது | கபிலம் | 120 | 3.2kg | 4.2kg |
| அசில் | கறுப்பு, சிவப்பு இறகுகள்உண்டு | பட்டானிக் கடலை | கபிலம் | 120 | 3.5kg | 4.5kg |
| பிரமா | வெள்ளை | அவரைவடிவம் | கபிலம் | 120 | 3kg | 3.7kg |

# எதிரியை தாக்குவது கராத்தே அல்ல!

எம். மாயவன்
ஆசிரிய பீடம்
'அங்குசம்'



தற்காப்புக் கலைகளில் பிரதானமானது 'கராத்தே' ஆகும். 'கராத்தே' என்ற சொல்லின் பொருள் வெறுங்கை என்பதாகும். 'வெறுங்கை முழும் போடும்' என்கிறது கராத்தே! முடியாது என்று நினைக்கக் கூடிய அனைத்தையும் முடித்துக் காட்டும். இது தான் தற்காப்புக் கலையின் தத்துவம். இக்கலை மனோ சக்தியை முக்கியமாகக் கொண்டு செயற்படுகிறது.

ஆரம்ப காலங்களில் மனிதன் உணவுக்காக வேட்டையாடல் என்பது அவசியமானதாக இருந்தது. இதன் போது பல்வேறு இன்னல்களையும் மனிதன் எதிர் கொண்டான். மிருகங்களாலே அவன் பாதிக்கப்பட்டதன் விளைவுதான் தற்காப்புக் கலையின் தோற்றம். மிருகங்களோடு சமர் செய்வதற்கு பல்வேறு 'தடுப்பு' முறைகளையும் கையாண்ட மனிதன், அதில் வெற்றி பெற்றதன் விளைவாக நாளடைவில் அவ்வாறான தடுப்பு

முறைகளை ஒன்றிணைத்து வீரக் கலையாகவும், ஒருவகை விளையாட்டுப் போன்றும் பயன்படுத்தத் தொடங்கினான். எதிரிகளிடமிருந்தும் ஆயுததாரிகளிடமிருந்தும் அவனைப் பாதுகாத்துக் கொள்ள 'வெறுங்கைப் பயிற்சி' உதவிபுரிந்தது. இவ்வாறாக வளர்ந்து வந்த ஒரு முழுமை பெற்ற கலையே "கராத்தே" ஆகும்.

காலப்போக்கில் கராத்தே பல்வேறு வடிவங்களையும் உள்வாங்கி, பரந்து விரிந்த ஒரு கலை வடிவமாகியது. அவை குங்.'.பூ, சோட்டோகான், ஜீடோகான் என்று இருபது வகையான வெவ்வேறு பெயர்களில் இன்று உலகம் முழுவதும் கராத்தேயில் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வகை-யாயினும் கராத்தேயில் "தடுத்தல்" மிக முக்கியமானது. இதன் நோக்கம் எதிரியைத் தாங்குவது அல்ல. எதிரியிடமிருந்து தற்காத்துக்கொள்வதேயாகும்.

கராத்தே கலைக்கு மூச்சுப் பயிற்சியும், தியானமும் மிக முக்கியமானவை. தொடர்ந்து சில மணிநேரம் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்கின்ற போது உடல் களைப்பாகவும், கடினமாகவும், இருக்கும். உடல் வலியும் ஏற்படும். இத்தகைய சமயங்களில் மூச்சுப் பயிற்சி மிக முக்கியமானது. (Breathing exercise) இதனை தினசரி அனுசரித்துப் போனால் உடலில் எந்தக் கேடும் ஏற்படாது. கராத்தேக் கலையை ஒருமுகத்-தோடு பயில்வதற்கும், திறன் விருத்தி செய்வதற்கும் மனதை ஒருநிலைப்படுத்தல் அவசியமாகின்றது. இதற்கு 'தியானப் பயிற்சி' அடிப்படையில் உதவுகின்றது. "நல்லதொரு காரத்தே கலைஞனிற்கு தியானமும் முக்கியமானது. ஒன்றுக்கொன்று ஆதாரமாகவும், மனதை ஒன்றாக குவியச் செய்தும், நினைத்த காரியங்களை அடைவதற்கும், காரிய சித்திக்கும், தியானம் உதவி செய்கின்றது." என புரூஸ்லி கூறுகிறார்.

இன்று உலகம் முழுவதும் பரந்து விரிந்துள்ள காரத்தே கலை, திறன் விருத்தியை அடிப்படையாகக் கொண்டது. தற்காலத்தில் அது எதிரிகளை கீழ்த்தரமாகத் தாக்கவும், முழுமையாக அவர்களை இயங்கா நிலைக்குக் கொண்டு செல்லவும் பயன்பட்டு வருவது கலைக்குரியது.

அங்குசம் வளர எமது
வாழ்த்துக்கள்!.....

விண்மீன்
அங்காடி

பிரதான வீதி,
நெல்லியடி

அங்குசம் வளர எமது
வாழ்த்துக்கள்!.....

ஆர்க்
என்ரபிறைசஸ்

இல 150, 152
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல,
021 222 2052

எல்சியா
சில்க்

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

அங்குசம் வளர எமது
வாழ்த்துக்கள்!.....

லிபேட்டி
மோட்டர் ஹவுஸ்

கொடிகாமம் வீதி,
நெல்லியடி

# நினைந்த போது



உயிராய் நினைந்த போது
உறவாக நீ மலர்ந்திருந்தால்,
எம் வாழ்வு இன்று
எப்படி இருந்திருக்கும்?
எண்ணிப் பார்க்கிறேன்!
இதமாக இருக்கின்றது.
ஆனால், .....
என்னருகில் நீ இல்லை
நிஜமான உன் நினைவுகளோடும்
நிழற் படத்தோடும்
நித்தமும் உன்னையே
நினைந்து வாழ்கிறேன்!
நிம்மதி அடைகிறேன்!!

**மு. மயூரன்**

**வலிமை மனித உடலினின்று வருவதில்லை. அசைக்க முடியாத மன உறுதியிலிருந்து வருகிறது. நமது மனத்தின் தூய்மை அதிகமாக இருந்தால், நமது வலிமையும் அதிகமாக இருக்கும். அவ்வளவு வெற்றி இன்னும் வேகமாக கிடைக்கும்.**

**-காந்தியடிகள்-**

## இலக்கிய சர்ச்சை

"ஓடையிலே என் சாம்பர்
ஓடும் போதும்
ஒண் தமிழே சலசலத்து
ஓட வேண்டும்!
பாடையிலே படுத்தூரைச்
சுற்றும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை
கேட்க வேண்டும்"

இந்தப் பாடல் வரிகளை இயற்றிய கவிஞர் யார்?
ஆதாரத்துடன் எமக்கு எழுதி அனுப்புங்கள்.
ஆரோக்கியமான கருத்துக்களுக்கு

**'அங்குசம்'**

களம் அமைக்கும்

அங்குசம் பணி தொடர நல்வாழ்த்துக்கள்!


# கஜமுகன் ஹாட்வெயர்

KMH

**இரும்பு வாணிபம், கட்டடப்**
**பொருள்கள் இறக்குமதியாளர்கள்,**
**சீமெந்து, வர்ணப்பூச்சுகள், மின்சார**
**உபகரணங்கள், கல்ரெக்ஸ் வாகன ஒயில் வகைகள், நஷனல்**
**பீ.வீ.சி குழாய்கள், பொ.:.னிக்ஸ் கதிரைகள் மற்றும் வன்**
**பொருள்களுக்கு நாடவேண்டிய இடம்**

# KAJAMUGAN HARDWARE

இல 147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல 021 222 2833



அங்குசம் வளர எமது
வாழ்த்துக்கள்!......


# ஜ ஸ ஸி

## பல்பொருள் வாணிபம்

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி

அங்குசம் வளர எமது
நல் வாழ்த்துக்கள்!...

# வைஷ்ணவி
# நகைப் பூங்கா



பிரதான வீதி, நெல்லியடி,
தொ.பே.இல:
0777 - 248923

## அட்டைப்படப்போட்டி

இவ் இதழின் அட்டைப் படம் சித்திரிக்கும் கருத்துக்களை கவிதை வடிவில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு பரிசு வழங்கப்படும். பரிவு ரூபா **1000/-**

முடிவுத் திகதி 15.02.2003

இங்கே கத்தரிக்கவும்

## 'முத்துக் குளிப்பு' போட்டி

### பரிசுக் கூப்பன்

பெயர்:.......................................................

வகுப்பு:.......................................................

பாடசாலை:.......................................................

........................ ........................

மாணவர் ஒப்பம் அதிபர் ஒப்பம்

அங்குசம் வளர எமது வாழ்த்துக்கள்!

## கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் 5 ஆவது வெளியீடு!!

## 'ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாறு'
ஓர் அறிமுகம்

**திரு. பொ. கமலரூபன்**

எமது முன்னைய வெளியீடுகள்

1985 இல் 'உயிர்ப்பு' - சிறுகதைத் தொகுதி
12 படைப்பாளிகளின் ஆக்கம்

1986இல் 'முதல் உதவி'
நூல் ஆசிரியர் - டாக்டர் க. சுகுமார்

1989இல் 'சிரித்திரன் சித்திரக் கொத்து'
(நிதி மூலம்)
சிரித்திரன் சிவஞானசுந்தரம்

2001 இல் '1980க்குப் பின் ஈழத்துப் புதுக் கவிதை'
(முற்பணம்)
திரு. பொ. கமலரூபன்

மேலும்,

- நூல் அறிமுக விழாக்கள்
- திரைப்பட விமர்சனங்கள்
- மறைந்த புலமையாளர் அறிமுகம்
- புலமைப் பரிசில் வழங்கல்
- தேடலுக்குகந்த நூல் நிலையம்

**கலாசார கூட்டுறவுப் பெருமன்றம்**

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி

# இது ஈழக்கடல்!!

ஆய்வாளர்களே!
கொஞ்சம்
நீங்களாய் பொறுத்திருங்கள்
மொழி பெயர்ப்பாளர்களே!
அவசரமாய் வாருங்கள்
இது
எங்களூர்க் கடல்
நீரின் பாஷைகளை
எங்களிற்கு கற்றுக்
கொடுங்கள்.
முடியாது போனால்,
எங்கள் பாஷைகளையாவது
நீருக்கு கற்றுக் கொடுங்கள்
ஏதோ சொல்லிக் கொண்டு
அலை ஆர்ப்பரிக்கின்றது.



சுற்றுலாப் பயணிகளே!
அங்கேயே நில்லுங்கள்.
உங்களுக்காய் நீலாம்பரி பாட
எங்கள் நீலக் கடல்.
உகந்ததல்ல
அழகு சுருங்கியதால் - இதில்
எழுகின்ற முகாரியும்
உங்களிற்கு உகந்ததல்ல.


அருவிகள் இங்கு
சங்கமிப்பதில்லை
மனிதக் குருதிகளே அருவிகளாய்.....
எங்கள் கடல் ஒரு போதும்
கொந்தளிப்பதில்லை.
ஆசைகளை ஜெயிக்காத
ஆத்மாக்களின் ஆசைகளே
அதைவிட வேகமாய்.......
முத்துக் குளிப்பவர்களே!
எதற்காக
ஒட்சிசனை தேடுகிறீர்?,
இது
ஈழக் கடல்.
இறங்கிப் பாருங்கள்.
எத்தனையோ ஆத்மாக்கள்
உள்ளே
சுவாசித்துக் கொண்டிருப்பதை!!


**க. ஜெசிதன்**
தமிழ்த்துறை
யாழ் பல்கலைக்கழகம்.


**மாறுதல் எல்லாம் இயல்பானவை என்று அமைதியாகவும், இன்முகத்துடனும் ஒத்துக்கொள்ள நீங்கள் தயாராக இருத்தல் வேண்டும். நீங்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போது, காட்சிகள் மாறாவிட்டால் ரயில் நின்று விட்டுருப்பதைக் காண்பீர்கள். மாறுதல் இன்றேல் வாழ்க்கை இல்லை.**

**-நன்றி. புதிய உலகம்-**

# அவகாசம்



இரவைக் கொழுத்த எழுந்த தீக்குச்சியென
அருணன் விடிகாலைக் காற்றை
உரசி ... மிக
முளாசி எரியப் பகற்பொழுது வந்ததென்போம்
எரிந்த அருணனெனுந் தீக்குச்சி
அந்தியின் பின்
கருகி அணையக் கவியும் இரா!
என்றாலும்...
மறுபடியும் விடிகாலைக் காற்றை உரசியிந்த
அருணனெனுந் தீக்குச்சி உயிர்த் தெரியும்..
இது வளமை.
கருகியது.... மீண்டுங்
கருக்கொள்ளச் சிலபொழுது
அவகாசந் தேவை அறிக; எம் மனது நேற்றுக்
கருகிற்று!
இன்றை அவகாசம் ... நம்மனதைக்
கருக்கொள்ளச் செய்யும்... கவின்கூட்டும்.
களைபிடுங்கி
எங்கள் நிலத்தில் இருளோட்டி ..... ஒளியூட்டி
சங்கை சமைக்கும்!
சத்தியங்காண் இது நடக்கும்!!

த. ஜெயசீலன்

அங்குசம்
சிறப்புற வாழ்த்துக்கள் .....

பிரியாணி,
ஃப்ரைட் றைஸ்,
நூடில்ஸ், சிக்கன் சூப்,
ஜிஞ்சர் சிக்கன், சிக்கன் ஃப்றை,
மற்றும்
**தரமான தென்இந்திய, சைனீஸ் உணவு வகைகள்**

நட்சத்திர ஹோட்டல்களில் அனுபவம் பெற்ற சமையற் கலையில் கைதேர்ந்தவர்களால் தயாரிக்கப்படும் உணவு வகைகளை சூடாகவும் சுவையாகவும் உடனுக்குடன் செய்து கொள்ள யாழ் நகரில் ஒரே இடம்.

விசேட நிகழ்வுகளுக்கு தேவையான உணவு வகைகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**TASTY FAST FOOD**

Hospital Road,
First Cross Street Junction,
Jaffna.
0777 – 271876

ஆஸ்பத்திரி வீதி,
முதலாம் குறுக்குத் தெரு சந்தி,
யாழ்ப்பாணம்.
0777 – 271876

உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு மற்றும் ஃபக்ஸ் வசதி
**தரமான போட்டோ பிரதிகள்**

லேசர் பிரின்ட் வசதியுடன் கம்பியூட்டர் ரைப் செற்றிங் வேலைகள், CD Writing வாடகைக்கு பிளாஸ்டிக் கதிரைகள், அப்பியாசக் கொப்பிகள், எழுது பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள், தினசரி பத்திரிகைகள் வாடகை கார், வான் மற்றும் ஆட்டோ உங்கள் தேவைகள் பலவற்றை ஒரே இடத்தில் பூர்த்தி செய்திட வாருங்கள்

**RAINBOW LINKS**

No: 208, First Cross Street,
Hospital Road Junction,
Jaffna.
021-222-3170

இல: 208, முதலாம் குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரி வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
021 - 222- 3170

# அந்த மர நிழலில்..................

மு. மயூரதாஸன்
ஆசிரிய பீடம்
'அங்குசம்'



அது மரம். தான், ஆனால், அதற்குள் ஏராளமான மகத்துவங்கள் மறைந்து கிடந்தன. என்ன தான் வாழ்க்கை இது என்று சலித்து விடுபவர்களும், அம் மரத்தடியில் வந்து சிறிது நேரம் ஆற அமர்ந்து செல்வார்களாயின் புதுப் பிறப்பெடுத்தவர்கள் போல, புதிய சிந்தனைகளைப் பெற்றே செல்வார்கள். ஒன்றாகப் பிறந்தவர்கள் அவ்வளவு அந்நியோந்நியமாக இருக்கிறார்களோ, இல்லையோ, அந்த மரத்தடியில் முதன் முதல் கண்டு அந்நியோந்நியமாகப் பழகியவர்கள் அவ்வாறே பிணைப்புக்களாலான உறவுகளாக ஆயுள் பூராவும் வாழ்வார்களே தவிர இடையிலே அவர்களின் இணைப்புக்கள் உடைவதில்லை. இவ்வாறு தான் அம்மரத்தின் பெருமைகள் பற்றி அவ்வூர்ப் பெரியவர் சொன்னார்.

உண்மை என்னவோ! அம் மரத்திற்கு மகிமைகள் அனேகம். ஆனால் அவை மர்ம விசேடங்களாகவே இருந்தன. அந்த மரம் யாரையும் கவர்ந்து இழுத்தது கிடையாது. ஆனால் பலரும் அம் மர நிழலாலே கவரப்பட்டுச் சென்றார்கள். அதைத் தான் அற்புதம் என்றார்கள். இது தான் உண்மை.

அந்தளவு கவரும் சக்தி அம்மரத்திற்கு இயற்கை கொடுத்த விசேடம். அதனை விசேடம் என்பதை விட 'இயற்கை அன்னை கொடுத்த கொடை' என்றே அவ்வூர் பெரியவர்கள் கருதினார்கள்: நம்பினார்கள். அவ்வழியால் செல்லும் போது அம் மரத்தைக் கதையாதவர்களே கிடையாது. அந்தளவுக்கு அனைவரையும் பிணைத்திருந்தது அம் மரம் அதனடியில் வயது வேறுபாடின்றி வந்திருந்து கதை பேசுபவர்கள். குசலம் விசாரிப்பவர்கள் என ஒரு கூட்டமும் கும்மி அடித்தல், ஓடி விளையாடுதல் என சிறுவர், சிறுமியரும், மன ஆறுதலிற்காக நிம்மதி தேடி வருபவர்கள் என ஒரு கூட்டமும் எந் நேரமும் அதனடியில் குழுமியிருக்கும்.

அவர்களிற்கு நிம்மதியளிப்பதில் ஆண்டவனிற்கு நேரானது அம்மரம்.

"காயமே இது பொய்யடா" என்று வருகிறவர்களும் அவ்விடக் காற்றுப் பட்டதுமோ 'வாழ்க்கை இது மெய்யடா" என்று மாறிவிடுகிறார்கள். அதில் வீசும் காற்றுக்கு அந்தளவு மகிமை என்பதனை யாரும் அறிவர். அக் காற்றுப்பட்டதும் உள்ளம் புல்லரிக்கும். உணர்வுகள் புனிதம் பெறும். இது அம் மரத்தடி நிழலுக்கே தனித்துவமானது.

கிளைகள் நீண்டு, இலைகள் பரப்பி, விழுதுகள் விட்ட அம் மரம் சில நூற்றாண்டுகளைக் கண்டது, பல தசாப்தங்களைப் பார்த்தது, பல்வகை மனிதர்களோடு பழகியது. ஆயினும், இன்றும் மனிதர்களைப் புரிந்து கொள்ள முடியாமல்த் தான் நின்று சுவாசிக்கிறது அம்மரம்.

நாலு திசைகளில் உள்ள ராகங்களையும் வீசும் தென்றல் அந் நிழலிற்கு கூட்டி வரும். குயில்களின் ஓசை தொடக்கம், கோழி கொக்கரிப்பது வரை அவ் இடத்திற்கு காற்று அள்ளி வரும் ஓசைகள், அவை கிளைகளில் மோதி மோதி இசை பாடும். அவற்றிற்கு ராக தாளம் இடுவது போல் அவ் வீதியால் செல்லும் வாகனங்கள் பலவகை ஒலிகள் எழுப்பும். சொல்லப் போனால் அந் நிழலடியே ஒரு தனி உலகம்.

படித்தவர்கள், பணக்காரர்கள் தொடக்கம் மரத்தடியே வாழ்வாக கொண்டவர்கள் வரைக்கும் அதனடியில் ஒன்றாக கூடி இருப்பர். தத் தம் சிந்தனையில் மூழ்கி இருக்கும் அவர்களை நிம்மதி ஆட்கொண்டிருக்கும். அந்தளவிற்கு அது ஒரு புது உலகம் மாதிரி அவர்களிற்கு ஆறுதலளிக்கும்.

அபூர்வ மகிமைகளை தன்னகத்தே கொண்டது அந்த மரம் என்றே ஊர் அறியும். ஆனால் அதனுள் இருக்கும் அற்புதங்கள் எல்லாவற்றிற்கும் ஓர் உண்மை உள்ளூர மறைந்தே இருந்தது. அந்த மரத்தை காலங் காலமாக மக்கள் நம்பினார்கள். நம்பிக்கை வீண் போகவில்லை. வாழ்க்கை என்பது நம்பிக்கை தானே!, "நம்பினார் கெடுவதில்லை' என்பதனை அம் மரமே எமக்கு உணர்வு பூர்வமாக உள்ளம் புல்லரிக்கும் பின்னணி கதைகளோடு உணர்த்தி நிற்கிறது.

(நிழல்கள் நீளும்)

அங்குசம் சிறப்புற வாழ்த்துக்கள்...........

தரமான கோட், சூட் வகைகளுக்கும்
இறக்குமதி செய்த ரெடிமேட்
ஆடைகளுக்கும்

# சியானாஸ்




## ரெக்ஸ்ரைல்ஸ் அன் ரெயிலறிங்

இல 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021 222 2967

அங்குசம் சிறப்புற வாழ்த்துகிறோம்.....
கண்ணைக் கவரும் கவர்ச்சி மிக்க புத்தம் புதிய
**HERO HONDA, TVS VICTOR, TVS CHAMP, LML SELECT II**
**மோட்டார் சைக்கிள் வகைகள்**

சீனத் தயாரிப்பான தரம் மிகுந்த YAMATO மோட்டார் சைக்கிள்
மற்றும் புதிய இன மோட்டார் சைக்கிள்கள்

ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வகைகள், லான்ட் மாஸ்ரர் வகைகள், ஹெல்மெற் வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள



இல 163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.இல - 021 222 2544

கொழும்புக்கிளை;
இல 46,புளூமென்டல் றோட்,
கொழும்பு - 13
தொ.இல 01347846

# யசோ மோட்டோர்ஸ்

## பண்டிதர் க. சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்திலே 1921ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி பிறந்த பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் குறித்து, **பேராசிரியர் அ. சண்முகதாஸ்** பத்திரிகை ஒன்றிலே பின்வருமாறு குறிப்புரை எழுதியுள்ளார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் தும்பளை தட்டாதெருப் பாடசாலையிலும் தொடக்க நிலைக் கல்வியைப் பெற்ற பண்டிதர் க.சச்சிதானந்தன், சோதிடராகிய தனது தந்தையாரிடம் சோதிடக்கல்வி, மகாபாரதப்படிப்பு, புராணப் படிப்பு ஆகியனவற்றைச் சிறு வயதிலிருந்தே கற்றுக் கொண்டார். இடைநிலைக் கல்வியினை நடேஸ்வரா, ஹாட்லி கல்லூரிகளிலே பெற்றுக்கொண்டார். தமிழிலும் ஆங்கிலத்-திலும் நல்ல தேர்ச்சியினைப் பெற்ற இவர், 1941ஆம் ஆண்டில் 'மதுரைப் பண்டிதர்" என்னும் பட்டத்தினைப் பெற்றார். சமஸ்கிருத மொழியினை சிவப்பிரகாச தேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், மாவை கு. பாலசுந்தரக்குருக்கள் ஆகியோரிடம் கற்றுத் தேர்ந்தார்.

1943ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் கொழும்பில் இலங்கைப்பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரா-சிரியராகப் பணிசெய்த காலத்தில் பண்டைத்தமிழரின் 'யாழ்' பற்றி ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக்குப்பண்டிதர் சச்சிதானந்தன் துணை செய்தார். சுவாமியுடன் தமிழ் நாட்டுக் கோயில்களுக்குச் சென்று அங்குள்ள சிற்பங்களிலே காணப்பட்ட யாழ், குழல் முதலிய இசைக் கருவிகளின் அமைப்பு, நீளம், பருமன் ஆகியனபற்றி ஆராய்ச்சி செய்தார். சுவாமியினுடைய புகழ் மிக்க 'யாழ் நூல்' உருவாவதற்கு

பண்டிதர் சச்சிதானந்தனுடைய பங்களிப்பும் இருந்ததென்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

இலண்டன் மற்றிக்குலேசன் இன்ரர் சயன்ஸ் (London matriculation Inter Science) தகைமையுடன் நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியிலும் யாழ். கரவெட்டி திரு இருதயக் கன்னியர் மடக்கல்லூாயிலும் உடுவில் மகளிர் கல்லூரியிலும் நடேஸ்வராக் கல்லூரியிலும் இவர் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் தமிழைச் சிறப்புப் பாடமாகவும் சமஸ்கிருதத்தினைத் துணைப்பாடமாகவும் கற்று இலண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டத்தினைப் பெற்று பரமேஸ்வராக் கல்லூயில் கணித, விஞ்ஞான ஆசிரியராகவும் யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் உயர்தர மாணவர்களுக்குத் தமிழ் ஆசிரியராகவும் விளங்கினார். 1965-1968ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச உயர் கல்விச் சபையின் உறுப்பினராக இருந்து முதலாம், மூன்றாம், ஆறாம் வகுப்புகளுக்கான தமிழ் மலர் நூலை ஆக்கினார்.

1967தொடக்கம் 1987ஆம் ஆண்டில் ஓய்வு பெறும் வரை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபராகவும் உளவியல் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். இலண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு 1960 ஆம் ஆண்டில் கல்வி டிப்ளோமாவையும் 1978இல் முதுதத்துவமாணிப் பட்டத்தினையும் வழங்கியது. 1966ஆம் ஆண்டில் இலண்டன் வானசாஸ்திரக்கழகம் இவரைத் தன் உறுப்பினராக ஏற்றுக் கொண்டு எ.்.வ் ஆர். எஸ் பட்டம் வழங்கியது.

பண்டிதர் சச்சிதானந்தன் மிகச்சிறந்த ஆக்க இலக்கிய காரராகவும் திகழ்கிறார். அவருடைய “ஆனந்தத்தேன்”

என்னும் கவிதைத் தொகுதி இலங்கை சாகித்திய மண்டல விருதினையும் 'யாழ்ப்பாண காவியம்' வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி தமிழ் அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் இலக்கியப் பரிசினையும், 2000ஆம் ஆண்டுக்குரிய சம்பந்தன் விருதினையும் பெற்றன. மிகச் சிறந்த கவிதைகளையும் இசை நாடகங்களையும் எழுதிய பண்டிதர் சச்சிதானந்தன், 'அன்னபூரணி' என்னும் நாவலையும் பத்துச் சிறு கதைகளையும் எழுதியுள்ளார்.

இவற்றை விட இவர் 'மாவைமுருகன்', 'தியாக பாமாலை', 'தமிழர் யாழியல்', என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். உளவியல், தமிழ் கற்பித்தல், கலைச் சொல்லாக்கம், தமிழ் இலக்கணம் தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை இவர் கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் படித்துள்ளார்.

**அடுத்த இதழில்....**



வருகிறார்...... ..

**20ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானி, மாமேதை**

**அல்பேட் ஐன்ஸ்ரைன்**

எழுதுகிறார்:

**எஸ். அனிரு**

ஆசிரியர், கணிதத்துறை

யாழ் பல்கலைக்கழகம்.

# தனிமையிலே உழலும் இதயம்

பிரபல்யமான ஆங்கில எழுத்தாளர், சிந்தனையாளர், கலாநிதி வில்லியம் ஸ்ரிஜர், ஒரு முறை தமது ஞாபகத்திற்கு வந்த ஒரு இனிய ஜீவனுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். முப்பது வருடங்களுக்கு முன் தமக்குத் கற்பித்த குருவிற்கு நன்றியுடன் நினைவு கூர்ந்து, அன்று அவர் தமக்கு வகுப்பில் அளித்த ஊக்கத்தையெல்லாம் பாராட்டி எழுதினார்.

அடுத்தவாரம் எதிர்பாராமல் அவருக்கு பதில் வந்தது! நடுங்கிய கரமொன்று அக்கடிதத்தை சற்றுக் கோனல் மாணலாக எழுதியிருந்தது.

"எனதன்புக்குரிய விலி!

உனது கடிதம் எனது உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை உனக்கு மனம் திறந்து எழுதுகின்றேன்! எனக்கு இப்போ எண்பது வயதாகின்றது. ஒரு சின்ன அறையிலே தனிமையிலே வாழ்ந்துகொண்டிருக்கும் வயோதிப மாது நான்... நாளாந்த உணவை சமைத்து உண்டு தனித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நான்... மரத்திலிருந்து கீழே விழப்போகும் கடைசிப் பழுத்த இலை!! விலி, நான் இப்போ எழுதப் போவது உனக்கு வியப்பைத் தரலாம். நான் பாடசாலையில் ஐம்பது வருடங்கள் கல்வி கற்பித்தேன். இந்தளவு காலத்திலும் நான் பெற்ற முதலாவது நன்றிக் கடிதம் இது தான். குளிர் மிகுந்த வெறுமையான காலை வேளை இந்தக் கடிதம் என் கைக்கு வந்தபோது, தனிமையிலே உழலும் இந்த வயதான இதயம் பசுமையான நினைவுகளிலே திளைத்து எவ்வளவு களிப்பையும், உற்சாகத்தையும் பெற்றது தெரியுமா? "

மிக்க நன்றி
உன் அன்புக்குரிய
ஆசிரியை


(நன்றி - நான்)

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரானது எனக்கூறி ஆப்கானிஸ்தான் மீது, 07.10.2001இல் அமெரிக்கா ஆரம்பித்த தாக்குதல் நடவடிக்கைக்கு 'வரையறையற்ற நீதி நடவடிக்கை' (Operation Infinite Justice) எனப் பெயரிட்டது.

# எதிர்பாருங்கள்

அடுத்த இதழில்

# 'புரூஸ்லி பற்றிய தொடர்'



## "முத்துக் குளிப்பு" போட்டி

**பரிசு ரூபா ஆயிரம்**

1. அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் மீது தொடுத்த தாக்குதல் நடவடிக்கைக்கு எவ்வாறு பெயரிட்டது?
2. 'உன்னையே நீ அறிவாய்" என்ற வாக்கியத்தை உரைத்தவர் யார்?
3. தேசிய சேமிப்பு வங்கி வழங்கிவரும் நகை அடைவு பிடித்தல் சேவையின் பெயர் என்ன?
4. கராத்தேக்கு அவசியமான இரு அடிப்படைப் பயிற்சிகள் எவை?
5. 'பத்திரிகைத்துறை"(சிலநினைவுக் குறிப்புகள்) என்ற நூலை எழுதிய எஸ்.பெருமாள், ஆசிரியராக எந்தப் பத்திரிகையில் பணியாற்றினார்?
6. மூலநோயை ஆரம்பத்திலேயே தவிர்ப்பதற்கு எவ்வகை உணவுகளை உட்கொள்ள வேண்டும்?
7. சுதந்திரமான - தனித்தியங்கக்கூடிய - எந்த அமைச்சுகளினதும் கட்டுப்பாட்டின் கீழ்வராத - இலங்கையில் இயங்குகின்ற மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு எது?
8. உலகின் அதி உயர்ந்த கட்டடம் எது? எங்கே உள்ளது?
9. "மெயின் காம்ப்" (எனதுபோராட்டம்) என்ற நூலின் ஆசிரியர் யார்?
10. சுவாமி விபுலானந்தரின் "யாழ் நூல்" உருவாவதற்கு பங்களிப்புச் செய்த , தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பண்டிதர் யார்?

**குறிப்பு:** * இக்கேள்விக்கான விடைகள் யாவும் இவ் இதழிலேயே இடம்பெற்றுள்ளன. இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

* பாடசாலை மாணவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விடைகளை **பரிசுக் கூப்பனுடன்** இணைத்து தமது அதிபரினூடாக எதிர்வரும் 15.02.2003 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்

| | |
|---|---|
| **முதற் பரிசு** | **500.00** |
| **இரண்டாம் பரிசு** | **350.00** |
| **மூன்றாம் பரிசு** | **150.00** |



# ‘சிகரம்’

## பண்டிதர் க.சச்சிதானந்தன்

“தின்னத் தமிழெனெக்கு வேணுமேயடாதின்று
செத்துக்கிடக்கத் தமிழ் வேணுமேயடா”

“சாவிற் றமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பல்
தமிழ் மணந்து வேக வேண்டும்”

ஆம் இன்று நேற்றல்ல சுமார் 50 வருடங்களுக்கு முன் பண்டிதர் க.சச்சிதானந்தன் தனது “ஆனந்தத்தேன்” கவிதைத் தொகுப்பில் “தமிழ்க் கவிப்பித்து” என்ற பத்தியில் எழுதிய வரிகள் இவை.

கடந்த 2001.10.06. அன்று பண்டிதர் சச்சிதானந்தனுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிய யாழ். பல்கலைக்கழகச் சமூகம் தங்களைக் கௌரவித்துக் கொண்டது.

இவர் எழுதிய “மஞ்சுகாவியம் மயங்கு தமிழியல்” என்ற நூலுக்கு 2002 ஆம் ஆண்டுக்கான சாகித்திய விருது வழங்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வழங் கப்பட்ட உயர்கல்வித் துறைக்கான இவ்விருது, 2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 - 30 ஆம் திகதிகளில் திருகோண மலையில் இடம்பெற்ற தமிழிலக்கிய விழாவில் வைத்து பண்டிதருக்கு வழங்கப்பட்டது.

(விவரமான கட்டுரை உள்ளே)

– ஆசிரிய பீடம் –
‘அங்குசம்’

அங்குசம் ஆசிரியர் குழுவினால் வெளியிடப்பட்டது.